"යමු යමු පෙරටම ජය ගැන නැත සංකා
අපේ හදවතයි "නර්ඩ" ශ්‍රී ලංකා"

සියක් මහල් නිල් අහසට හිමි කරමු
ඇල දොළ වැව් ඉදිකර බිම සරු කරමු
නව නිපැයුම් මැද පරිසරය ද රකිමු
විදුලි වේගයෙන් රට පෙරටම යවමු

"යමු යමු පෙරටම ජය ගැන නැත සංකා
අපේ හදවතයි "නර්ඩ" ශ්‍රී ලංකා"

බී වී කේ ධම්මික බණ්ඩාර
නිදහස් මාවත
දම්බොක්ක
බෝයගනේ

### 6.1.4 1000 சிறிய (அடிப்) பாலங்களை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்தமை.



நாட்டின் கிராமப் பிரதேசங்களில் போக்குவரத்து நெருக்கடிகளை குறைப்பதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அமைச்சரவையினால் நேர்ட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மூன்று வருடங்களுக்குள் சுமார் ஆயிரம் சிறிய பாலங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது 900 மில்லியன் ரூபா பெறுமதியான இந்தச் செயற்திட்டத்தின் கீழ் நாட்டின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளடங்கும் விதத்தில் இந்த சிறிய பாலங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் 2017-ஆம் ஆண்டுக்குள் அடிப்பாலம் நிர்மாணிக்கும் தொழில்நுட்பம் பற்றிய அறிவூட்டும் நிகழ்ச்சிகள் மாவட்ட மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன6.1.5 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைந்த அரச நிறுவனங்களின் கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தை நேர்ட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கேள்வி அறிவித்தல் கோராமல் நேர்ட் நிறுவனத்தினூடாக மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தமை.

நேர்ட் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிர்மாணத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அரச கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதுடன் அதற்காக கடந்த 20 வருட காலத்துக்குள் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களின் தரம் தொடர்பான அறிக்கை ஒன்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றினால் அத்தாட்சிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் 2017ஆம் ஆண்டில் கட்டடம் சம்பந்தப்பட்ட அறிக்கை CIDA நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்கான அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

### 6.1.6 நேர்ட் நிறுவனத்தின் வருடாந்த ஆராய்ச்சி மாநாடு மற்றும் திறந்த தினக் கண்காட்சி நடாத்துதல்



நிலையத்தின் வருடாந்த ஆராய்ச்சி மாநாடு விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளரின் தலைமையில் 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி நடைபெற்றது. இதற்காக 7 ஆய்வுப் பத்திரங்கள் பல்வேறு பொறியியல் துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சமர்ப்பிக்கப்பட்டதோடு சிறந்த ஆய்வுப் பத்திரங்கள் பாராட்டப்பட்டன.

நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற திறந்த நாள் கண்காட்சி 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி கௌரவ விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரின் பங்குபற்றுதலோடு நடாத்தப்பட்டதுடன் அதன் மூலம் சாதாரண மக்களுக்குத் தொழில்நுட்பப் பூங்காவை இலவசமாகக் கண்டுகளிக்க சந்தர்ப்பம் கிடைப்பதோடு தொழில்நுட்ப சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடிந்தது.

## 6.2. பிரதான ஆராய்ச்சிச் செயற்திட்டம் –2017 ஆம் ஆண்டு

நேர்ட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான ஆராய்ச்சிச் செயற்திட்டம் பற்றிய சுருக்கமான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 6.2.1. தன்னியக்க, குளிர்பானம் மற்றும் யோக்கட் நிரப்பும் இயந்திரம் ஒன்றை அறிமுகப்படுத்தல்

பயனுறுதியும் வினைத்திறன் மிக்கதாகவும் சுகாதார முறைப்படியும் யோக்கட் மற்றும் குளிர்பான வகைகளை பாத்திரங்களில் நிரப்புவதை நோக்கமாகக் கொண்டு இந்த செயற்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.



சிறிய அளவிலான கைத் தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் அவர்களது நிதியைக் கொண்டும் இந்த இயந்திரத்தை உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்திட்டத்திற்கான உத்தேச செலவு மதிப்பீடு ரூபா. 750,000/= ஆகும். இயந்திரத்தின் உற்பத்தி கொள்ளளவு – மணித்தியாலத்துக்கு 200ml அடங்கிய 300 கோப்பைகள் (cups)

### 6.2.2 பக்கச் சுவர் நிர்மாணத்திற்கான தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல்



பூர்த்திசெய்யப்பட்ட பக்கச் சுவர்கள்



பயன்படுத்தப்பட்ட அச்சுக் கற்கள்

தற்காலத்தில் வீடுகள் நிர்மாணிப்பதில் இன்றியமையாத சுற்றுமதில் அமைப்பதற்கான சுற்றுமதில் நிர்மாணிப்புத் தொழில்நுட்பம் ஒன்றை அறிமுகப்படுத்துவது இங்கு நோக்கமாக உள்ளது. சீமந்து கருங்கல் தூள்களைக் கொண்ட கலவையினால் செங்கல் தயாரித்து அந்த கல்லினால் சுற்றுமதில் நிர்மாணித்து பின்பு அதிக அமுக்கம் கொண்ட கம்பிகளைப் பயன்படுத்தி அந்த சுற்று மதிலுக்கு பலம் சேர்த்து சக்தி வாய்ந்ததாக மாற்றப்படுகின்றது.

இந்த முறையில் உள்ள நன்மைகள் :

- உற்பத்திக்காக குறைந்த அளவு இடவசதி தேவைப்படல்.
- வெளித்தோற்றம் கவர்ச்சியாக இருத்தல்.
- சாதாரண முறையைவிட முழுச் செலவு குறைவாக இருத்தல்

**Fly Ash ( பறக்கும் சாம்பலை) முன் தயாரிக்கப்பட்ட கொங்கிரீட் உற்பத்திக்காக பயன்படுத்தல்**





Fly ash (பறக்கும் சாம்பல்) ஐ பயன்படுத்தி ஆய்வுகூடத்தில் முன் கொங்கிரீட் தயாரிக்கும் ஆக்கக் கூறுகளைப் பரிசோதனை செய்தல்

Fly ash (பறக்கும் சாம்பல்) என்பது நிலக்கரி தகனம் அடையும்போது காற்றில் பறந்து சென்று நிலத்திலே தேங்கி நிற்கின்ற மிகச்சிறிய துணிக்கைகளாலான ஒரு பதார்த்தம் ஆகும். நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தில் மின் உற்பத்தி செய்யும் போது இவை கழிவுகளாக சுற்றுப்புற நிலப்பரப்பில் தேங்கி நிற்கும். இவ்வாறு பாரிய அளவில் பறக்கும் சாம்பல் நிலத்தில் தேங்கி நிற்பது மின் நிலையத்தின் முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளது. தற்பொழுது இந்த Fly ash ( பறக்கும் சாம்பலை) நிர்மாண நடவடிக்கைகளுக்கும் முன் தயாரிக்கப்பட்ட கொங்கிரீட் கட்டட உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்த முடியுமா என்பது பற்றி ஆராய்ந்து பார்ப்பது இந்த திட்டத்தின் நோக்கமாக இருந்தது. ஆய்வுகளின் முடிவின்படி 15% ஆன fly ash ஐ சீமெந்துக்குப் பதிலாகப் பாவிக்க முடியும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு 20 வீதமான அளவில் அமுக்கப்பட்ட சிமெந்துக் கல் உற்பத்திக்கு பயன்படுத்த முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையின் வேண்டுகோளுக்கிணங்க இந்த ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. எனவே தற்பொழுது பாவனைக்கு உட்படுத்தப்படாத இந்த (Fly ash) பறக்கும் சாம்பலை எதிர்வரும் காலங்களில் நிர்மாண நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

### 6.2.4 Bottom Ash (பொட்டம் ஆஷ்) ஐப் பயன்படுத்தி சீமெந்துக் கல் மற்றும் நிலத்தில் பதிக்கும் கல் உற்பத்தி செய்யும் தொழிநுட்பத்தை அறிமுகம் செய்தல்

நுரைச்சோலை மின் நிலையத்தில் நிலக்கரி எரியும்பொழுது வெளியாகின்ற மற்றுமொரு கழிவே Bottom Ash ஆகும். இதுவும் ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. இலங்கை மின்சார சபையின் கோரிக்கையின் பேரில் bottom ash ஐப் பயன்படுத்தி சீமெந்து மணல் கல் உற்பத்தி செய்வது தொடர்பாக இரண்டு செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதன் போது இந்நிகழ்ச்சியில் 30 பேர் பங்குபற்றியதுடன் தற்போது அவர்கள் bottom ash ஐப் பயன்படுத்தி சீமெந்து அச்சுக் கற்களை உற்பத்தி செய்து வருகிறார்கள்.




### 6.2.5 கூரை ஓடுகளை உற்பத்தி செய்யும் போது ஓடுகளின் ஈரலிப்பை நீக்குவதற்காக வினைத்திறன்மிக்கதும் பயனுறுதிவாய்ந்ததுமான தொழில்நுட்பமொன்றை அறிமுகப்படுத்துதல்

ஓடு உற்பத்தியில் காணப்படும் அதிகமான உற்பத்தி செலவைக் குறைப்பதற்காக வர்த்தக, கைத்தொழில் அமைச்சு உற்பத்தியாளர்கள் சங்கத்தினூடாக மேற்கொண்ட ஆய்வின் போது ஓடுகளின் ஈரலிப்பை நீக்குவதற்கான தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும் என உறுதிப்படுத்தப்பட்டது அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொருத்தமான உலர்த்தும் தொகுதி ஒன்றை மேம்படுத்துவதற்காக ஆராய்ச்சிச் செயற்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.



ஓட்டு தொழிற்சாலையின் ஆவியுயிர்ப்பு உபகரணமும் அடுப்பும்

2017ஆம் ஆண்டிலே ஓடு உலர்த்தும் தொகுதிக்குத் தேவையான கட்டடமும் சூளை மற்றும் புகைபோக்கி போன்றனவும் உருவாக்கப்பட்டன. உத்தேச உலர்த்தும் தொகுதி 100' ×25' அளவிலான கட்டடத்தில் சூளையொன்று, நகர்த்திச் செல்லக்கூடிய விதமாக 9 அடி உயரம் வைக்கக்கூடிய 12 ராக்கைகளுடன் கூடிய சுரங்கம் ஒன்று, ஏற்றுதல் இறக்குதல் வேலைகளை மேற்கொள்வதற்கான தொகுதியொன்று, GI குழாய் மற்றும் 60 அடி உயரமான புகைபோக்கியையும் கொண்டதாக இருக்கும் 2017ஆம் ஆண்டு நிறைவுறும் பொழுது இந்த தொகுதியின் 95% அளவான வேலைகள் செய்து முடிக்கப்பட்டு இருந்தன

**6.2.6 பொதுமக்கள் பங்குபற்றுதலோடு ஒருங்கிணைக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தல்**

உரிய விதத்தில் கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ளாமை எமது நாட்டின் நகர்ப்புறங்களின் பிரதான பிரச்சினை ஆகும் கழிவு முகாமைத்துவ மாதிரிச் செயற்திட்டமாக ஒருங்கிணைக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ செயற்திட்டமொன்று இலங்கை மின்சார சபை ஊழியர் விடுதிக்காக இலங்கை மின்சார சபையின் அனுசரணையோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்த்திட்டம் 20 கன மீட்டர் கொள்ளளவுள்ள உக்கும் தாங்கிகள் இரண்டு, மற்றும் சாம்பலாக்கி(incinerator ) ஒன்றையும் கொண்டுள்ளது. உக்கல ◌தாங்கி பற்றி அந்த மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடத்தி, இந்தத் தொகுதி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



இ.மி.ச கொத்தமலை மின்உற்பத்தி நிலையத்தின் விடுதிக்கான 20m3 Biogas Digester



இ.மி.ச கொத்மலை பங்களாவுக்கான 20m3 Biogas Digester

**6.2.7 வீதிவிளக்குகளை ஒளிரச் செய்வதற்கும் அணைப்பதற்கும் பாதுகாப்பான முறை ஒன்றை அறிமுகப்படுத்தல்**

இலங்கை மின்சார சபை, இலங்கை மின்சாரக் கம்பெனி(LECO) இலங்கை பொறியியல் நிலையம் NWS (IESL) ஆகியன ஒலிபரப்பு அலைகளைப் பாவித்து பாதுகாப்பான முறையில் வீதி விளக்குகளை ஒளிரச் செய்வது மற்றும் அணைப்பதற்கானதொழில்நுட்பம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு செயற்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளன. தற்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்புடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**6.2.8. தேசிய மின்சாரத் தொகுதியோடு தொடர்புடைய சூரிய மின் உற்பத்தி நிலையங்களின் செயலாற்றுகையைப் பகுப்பாய்வு செய்தல்**

சூரிய அனல் மின் உற்பத்தி நிலையங்களின் செயலாற்றுகை அவ்வப் பிரதேசங்களின் வானிலைக் காரணிகளில் தங்கியுள்ள்து. வானிலை மாற்றங்கள் ஏற்படும் நிலைமைகளில் சூரிய அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி பற்றி ஆய்வு செய்வதற்காக இந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக வேண்டி நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி விபரம் மற்றும் குறித்த காலப் பகுதிக்குரிய வானிலைத் தரவுகளை ஒன்று திரட்டுதல் என்பன இந்த நிறுவனத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு அவற்றுக்கு இடையிலான தொடர்புகள் பற்றிப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன அந்தவகையில் தற்பொழுது காணப்படுகின்ற தரவுகளின் அடிப்படையில் சூரிய அனல்மின் நிலையங்களின் மின் உற்பத்திக்கும் குறித்த வானிலைக் காரணிகளுக்கும் இடையிலான தொடர்பு உருவாக்கப்பட்டு வருகின்றது.

### 6.2.9 புகையூட்டப்பட்ட மீன் உற்பத்தி



புகையூட்டபட்ட மீன்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பாரிய கேள்வி உள்ளதால் அவ்வாறு புகைமீன் உற்பத்தி செய்வது மீனவப் பிரதேசங்களிலுள்ள மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவியாக அமையும். இந்தப் புதிய ஆராய்ச்சியை மேற்கொண்டு புகையூட்டப்பட்ட மீன் உற்பத்திக்கு அவசியமான தொழில்நுட்பம் அறிமுகம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதோடு முன்னோடி செயற்திட்டமாக தற்போது இரு அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

### 6.2.10 ஆயுர்வேத வைத்திய முறைக்குத் தேவையான இயந்திரங்களை மேம்படுத்தல்

ஆயுர்வேத வைத்திய முறையில் மருந்து உற்பத்தி செய்வதற்கு அவசியமான இயந்திரங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு குளிசை உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் பசை மருந்து (கல்க) தயாரிப்பதற்காகவும் வேண்டி இயந்திரங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.





### 6.2.11 தெங்குக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு அவசியமான சாதனங்களை அறிமுகம் செய்தல்

தற்காலத்தில் தேங்காய் பறித்தல், தேங்காய் தோலுரித்தல் போன்ற வேலைகளுக்குத் தேவையான தொழிலாளர் சேவைகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் தொழிலாளர் விலை அதிகரிப்பு காரணமாக தெங்குக் கைத்தொழில் துறையில் தேங்காய் பறித்தல் கடும் சிக்கலான விடயமாக மாறியுள்ளதுடன், அந்தப் பிரச்சினைக்குரிய தீர்வாக தேங்காய் அறுவடை செய்வதற்கான உபகரணம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. தேங்காய் பறிப்பதற்காக நீள அளவைக் கூட்டிக் குறைக்க கூடிய விதத்தில் அமைத்து செய்யப்பட்ட கொக்கியின், துறைசார் ஆய்வு நிறைவு பெற்று பிந்திய விபரம் சேகரிப்பு நடைபெற்று வருகின்றது. இதற்கு மேலதிகமாக தேங்காய் தோல் உரிப்பதற்கு கையால் இயக்குகின்ற உபகரணமொன்றும் மின்சாரத்தினால் இயங்குகின்ற உபகரணமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த உபகரணங்கள் கள ஆய்வுகளுகக்கா அனுப்பி வைக்கப்பட்டு பிந்திய விபரம் சேகரிப்பு நடைபெற்று வருகின்றது.



கையால் தேங்காய் உரிக்கும் உபகரணம்



கைத்தொழில்சார் தேங்காய் உரிக்கும் இயந்திரம்

**6.2.12 Hyperbaric ஒட்சிசன் Therapy இற்கான Hyperbaric ஒட்சிசன் Chamber**



Hyperbaric oxigen என்பது 100% ஒட்சிசன் உள்ள சூழலில் 2 வளி மண்டல அமுக்கங்களின் கீழ் நோயாளியை ஒட்சிசன் அறைக்குள் வைத்து சிகிச்சையளிக்கும் ஒரு முறையாகும். இந்த முறைக்காக ஒட்சிசன் chamber ஒன்றை உற்பத்தி செய்வதே இந்தச் செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. ஆரம்பமாக இதுவரை ஒட்சிசன் அறை அமைக்கப்பட்டுள்ளது

**தும்புக் கயிறு பின்னும் இயந்திரம் ஒன்றை உருவாக்குதல்**

இலங்கையில் தும்புக் கயிறு உற்பத்தி பிரதானம குடிசைக் காகைத்தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது இந்த உற்பத்திகள் உள்நாட்டு சந்தைகளைக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது (இக்கைத்தொழில் உடல் உழைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் குறைந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டவர்களாக உள்ளனர்). உற்பத்தி வினைத்திறன் மற்றும் தரத்தை அதிகரிப்பதன் ஊடாக அந்த மக்களின் வருமானத்தை மேம்படுத்தல் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தும்புக் கயிறு தயாரிப்பதற்காக அதிக உடல் உழைப்பை செலவழிக்காது அதற்காக வேண்டி இயந்திரம் ஒன்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட இந்தச் செயற்திட்டத்தில் இதுவரை கணிசமான அளவு வேலைகள் நிறைவு பெற்றுள்ளன.

**6.2.14 சிறியளவிலான பால் கறக்கும் உபகரணம் ஒன்றை அறிமுகப்படுத்தல்**

சிறிய அளவிலான பால் உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் கைகளால் இயக்கக்கூடிய இந்தப் பால் கறக்கும் இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளின் பின் இந்த இயந்திரங்கள் உற்பத்தியாளர்களிடம் பகிர்ந்திக்கப்பட்டதுடன் அவர்களிடமிருந்து பிந்திய விபரம் சேகரிப்பு அறிக்கைகளும் பெறப்பட்டன.

தற்போது இந்த இயந்திரத்தை உற்பத்தி செய்வதற்காகப் பொருத்தமான கொள்வனவாளர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 6.3 முன்னோடிச் செயற்திட்டங்கள்

நிலையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களைப் பிரபல்யப்படுத்துவதற்காகவும் நடைமுறைப் பாவனையின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றங்களை இனங் காண்பதற்காகவும் முன்னோடி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகிறன.

#### 6.3.1 பின் அமுக்க முன்வலுவூட்டப்பட்ட பக்க மதில்

**தலுபிடிய கிளினிக் கட்டடத்திற்கான சுற்றுமதில் நிர்மாணித்தல்**

தலுபிடிய கிளினிக் கட்டடத்தில் அமைந்துள்ள காணி மஹர பிரதேச சபைக்கு சொந்தமானதாக உள்ளதோடு, இந்த திட்டத்தை முன்னோடி செயற் திட்டமாக நிர்மாணிப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்டு மஹர பிரதேச சபையிடம் தேவையான அனுமதியும் பெறப்பட்டது. நிலத்துக்குள் நிலைநிறுத்தபடுகின்ற பின்சாய்வு 2.4m ஆகும். தடுப்புச் சுவரின் நீளம் 6.7 மீற்றர்களாகும். செயற்திட்டத்துக்க்கான செலவு ரூபா 250,000.00/= ஆகும்





வேலைப்பாடுகள் கொண்ட கொங்கிரீட் தூண்களைக் கொண்ட சுவர் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் நிர்மாண வேலைகள் நிறைவடைந்த பிறகு பின் அமுக்கம் சேர்க்கப்பட்டது. அமுக்கத்திற்குப் பிந்திய தடுப்புச் சுவர்களில் உள்ள நன்மை குறைந்த பரப்பு, செலவு மீதப்படுத்தப்படல் (15%) சிறந்த முடிவுத் தன்மை என்பனவாகும்.

#### 6.3.2. 10 உயிர்வாயு ஜெனரேட்டர்கள் பட்டுவத்தை கிராமத்துக்குப் பகிர்ந்தளித்தல்

500 ml கொள்ளளவுள்ள பிளாஸ்டிக் தாங்கிகள் பாவித்து உற்பத்தியாகும் உக்கும் கழிவுகைளப் பயன்படுத்தித் தொழிற்படும் உயிர்வாயு ஜெனரேட்டரொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கழிவுகள் அற்ற கிராமம் என்ன எண்ணக்கருவை பிரதேச சபையின் ஊடாக பிரபல்யப்படுத்துவதே இதன் நோக்கமாகும். 10 வீடுகளுக்காக இவ்வாறான உயிர்வாயு ஜெனரேட்டர்கள் ராகம பட்டுவத்த பிரதேசத்தின் 10 வீடுகளுக்கு பிரதேச செயலாளரின் தலைமையில் பகிர்ந்தளிக்கப்பட்டன.



பிளாஸ்ரிக்-கல உக்கல் கருவி மற்றும் வாயு சேகரிப்பான்

### 6.3.3 அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி நேர்ட் தொழில்நுட்பப் பூங்காவுக்கான சுற்று மதில் நிர்மாணித்தல்

நேர்ட் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சுற்றுமதில் நிர்மாணிக்கும் தொழில்நுட்பம் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டும் நோக்கில் சுற்றுமதில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இரண்டு சுற்று மதில்கள் நேர்ட் தொழில்நுட்பப் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



தொழில்நுட்பப் பூங்கள் அமைந்துள்ள முன்வலுவூட்டப்பட்ட கொங்கிரீட்



தொழில்நுட்பப் பூங்காவில் அமைந்துள்

### 6.3.4. ஆயுர்வேத மருந்து தயாரிப்பதற்கு அவசியமான இயந்திரங்களை உற்பத்தி செய்தல்

ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு ஆயுர்வேத பாதுகாப்பு சபைக்கு ழங்கப்பட்டுள்ளது.

### 6.3.5 பனை சார்ந்த உணவுகளைத் தயாரிப்பதற்காக உற்பத்தி செய்யப்பட்ட உலர்த்தும் இயந்திரம்

பனை ஆராய்ச்சி சபையின் வேண்டுகோளுக்கிணங்க பனை உற்பத்திக்கு அவசியமான இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன



பனைச்சாறு உலர்த்தும் இயந்திரம்

## 6.4 தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள்

நிலையத்தினால் மின்சார முகாமைத்துவம், நிர்மாணம், மற்றும் கைத்தொழில் போன்ற துறைகளை உள்ளடக்கியதாகத் தொழில்நுட்ப சேவைகள் வழங்கப்படுகின்றன. அந்தவகையில் 2017ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொழில்நுட்ப சேவைகள் பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.


6.4.1 **தகனக் கிரியை மண்டபங்கள் மற்றும் கழிவு எரிப்பகங்கள் போன்றவற்றை திருத்துதலும் மாற்றம் செய்தலும்**

| இலக்கம் | செயற்திட்டத்தின் பெயர் | பெறுமதி தொகை (ரூபா) | கிடைத்த தொகை (ரூபா.) | நிலைமை |
|---|---|---|---|---|
| 1 | இரத்தினபுரி வைத்தியசாலையின் குப்பை எரிப்பு நிலைய புகைபோக்கியின் திருத்த வேலைகள் | 2,29,765.31 | 1,14,882.66 | பூர்த்திசெய் யப்பட்ட திகதி |
| 2 | வலப்பனை பிரதேச சபையின் தகனக் கிரியை மண்டபத்தின் திருத்த வேலைகள். | 94,378.32 | 94,378.32 | பூர்த்திசெய்ய ப்பட்ட திகதி |
| 3 | கட்டுவானை தகனக்கிரியை மண்டபங்கள் நிர்மாணத்திற்கான ஆலோசனைச் சேவை வழங்கல் | 2,00,000.00 | 2,00,000.00 | பூர்த்திசெய்ய ப்பட்ட திகதி |

6.4.2 **இலங்கை பூராவும் அமைந்துள்ள பல்வேறு கைத்தொழில் நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க மின்சக்தி மற்றும் சுற்றாடல் சேவைகள் திணைக்களத்தினால் கீழ்க்காட்டப்பட்டுள்ள சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.**

இலங்கை பூராவும் அமைந்துள்ள பல்வேறு கைத்தொழில் நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க மின்சக்தி மற்றும் சுற்றாடல் சேவைகள் திணைக்களத்தினால் கீழ்க்காட்டப்பட்டுள்ள சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

- சுற்றாடல் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆய்வுகூடப் பரிசோதனைகள்
- சுற்றாடல் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வுகளை வழங்குதல்
- சுற்றாடல் தரங்களைப் பேணுவதற்கான மேற்பார்வை நடவடிக்கைகள்
- பொய்லர்களின் வினைதிறன் மற்றும் புகைவாயுப் பகுப்பாய்வு
- தொழிநுட்பச் செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்
- பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- எரிசக்தித் துறைக்கான சேவை வழங்கல்



**எரிசக்தி மற்றும் சுற்றாடல் சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் பற்றிய தகவல்களின் சாராம்சம்**

| செயற்திட்டம்/ செயற்பாடு | பௌதிக (சேவைகளின் எண்ணிக்கை) | | நிதி (ரூபா 1000) | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | | உண்மை நிலை | | |
| | இலக்கு | பூர்த்தி செய்யப்பட்ட | வருமானம் | பங்களிப்பு | வருமானம் | நேரடிச் செலவு | பங்களிப்பு |
| சுற்றாடல் ஆய்வுகூடப் பரிசோதனை | 1000 | 872 | 15,00,000.00 | 6,00,000.00 | 14,32,811.93 | 9,58,065.54 | 4,79,157.88 |
| கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வுகளை வழங்குதல் | 50 | 35 | 10,00,000.00 | 8,00,000.00 | 8,75,223.34 | 2,19,946.62 | 6,53,543.19 |
| ஒழுங்குவிதிகளுக்கி இணங்க சுற்றாடல் மேற்பார்வைச் சேவைகளை வழங்குதல் | 200 | 198 | 47,50,000.00 | 28,50,000.00 | 58,23,898.24 | 14,35,125.25 | 43,88,771.99 |
| பொயிலர் செயலாற்றுகை மற்றும் உடனடி வாயுப் பகுப்பாய்வு | 125 | 147 | 55,00,000.00 | 27,50,000.00 | 59,61,676.26 | 27,12,297.86 | 32,49,378.40 |
| EMC மூலம் தொழில்நுட்பச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஆலோசனை வழங்கல் | 50 | 57 | 15,00,000.00 | 10,50,000.00 | 8,65,878.44 | 2,11,758.38 | 6,54,120.06 |
| பயிற்சி நிகழ்ச்சிகள் - E&EMC | 2 | 1 | 3,00,000.00 | 1,50,000.00 | 1,44,869.58 | 38,969.60 | 1,05,899.98 |
| எரிசக்தி சார்ந்த சேவைகள் நடாத்துதல் | 10 | 3 | 7,00,000.00 | 4,90,000.00 | 1,69,500.00 | 12,500.00 | 1,57,000.00 |
| **இறுதிக் கூட்டுத்தொகை** | | | 1,52,50,000.00 | 86,90,000.00 | 1,52,73,856.79 | 55,88,663.25 | 96,87,871.50 |

6.4.3 **பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல் "முகாமைத்துவம் மற்றும் கழிவுநீருடன் தொடர்புடைய பிரச்சினைகள்"**



கழிவு நீர் சுத்தமாக்கிகள், தர நியமங்கள், கழிவு நீர் சுத்திகரிக்கும் தொழிநுட்ப முறைகள், தொழிற்சாலைக் கழிவுநீரினால் ஏற்படும் சூழல் தாக்கங்கள், கைத்தொழில் வகைகள், கழிவுகளைப் பகுப்பாய்வு செய்யும் வழிமுறைகள் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பங்கேற்றோரின் எண்ணிக்கை 17 ஆகும்.

### 6.4.4 ISO 17025 தரச் சான்றிதழ் பெற்றமை

2017 ஆம் ஆண்டுக்கான கழிவு நீர்ப் பரிசோதனை மற்றும் ஒலி மட்டப் பரிசோதனை என்பவற்றுக்காக இலங்கை இலங்கை அங்கீகார சபையின் ஊடாக இந்த தரச் சான்றிதழ் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டது.



### 6.4.5 உன்னத உற்பத்தி நிலையம் (Center for Manufacturing Excellence) ஊடாக வழங்கப்படுகின்ற சேவைகள்

- சிக்கலான சரியான வடிவங்களைக் கண்டுபிடிப்பதற்காக திட்டமிட்டு உற்பத்தி செய்தல்
- வடிவங்களுக்கான திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு.
- சமனான வசதிகளை வழங்குவதற்காக சாத்தியமான முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்
- தொழிநுட்பக் கண்காட்சி மத்திய நிலையமாகச் செயற்படல்
- பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குதல்
- தங்களது படைப்பாற்றல் மற்றும் உற்பத்தித் தேவைகளுக்காகப் பயன்படுத்துவர்கள் மற்றும்/ உற்பத்தியாளர்களின் கைத்தொழில்களை உருவாக்குவதற்காக அனுசரணைச் சேவைகளை வழங்குதல்.

**மேற்படி சேவைகளை வழங்குவதற்காகப் பின்வரும் நவீன இயந்திர உபகரணங்கள், CME யில் நிறுவப்பட்டுள்ளன.**

- CAD / CAM ஒருங்கிணைந்த மென்பொருள்
- CNC மோல்டிங் இயந்திரம்
- CNC இயந்திரங்கள்

- CNC EDM வயர் வெட்டும் இயந்திரம்
- CNC EDM இயந்திரம் (Spark Erosion)
- அதிவேக ஸ்கேன் இயந்திரம்
- துல்லியமான உருளை வடிவிலான அரைக்கும் ஆலை
- மேற்பரப்பு கிரேன்
- பிளாஸ்ரிக் மெருகூட்டல் உபகரணங்கள்
- அரைத்தல் மற்றும் சிற்பம் பிரதி எடுத்தல்
- பரிசோதனை மற்றும் அளவீட்டு உபகரணம்

CME இனூடாக 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சேவைகள்

| மாதம் | நிர்மாணங்கள் மற்றும் உற்பத்தி | ஆக்கக்கூறுகளை உற்பத்தி செய்தல் | சோதனைகள் மற்றும் தேடல்கள் | பயிற்சி நிகழ்ச்சிகள் | பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 6,50,000.00 | 47,800.00 | | 34,087.00 | 7,31,887.00 |
| பெப்ரவரி | | 7,000.00 | 11,500.00 | | 18,500.00 |
| மார்ச் | | 63,500.00 | | | 63,500.00 |
| ஏப்ரல் | | 38,800.00 | | | 38,800.00 |
| மே | | 36,000.00 | | | 36,000.00 |
| ஜூன் | | 63,000.00 | | | 63,000.00 |
| ஜூலை | | 23,000.00 | | 30,000.00 | 53,000.00 |
| ஆகஸ்ட் | | 17,000.00 | | | 17,000.00 |
| செப்டம்பர் | 19,999.99 | 1,19,139.15 | 3,000.00 | 15,000.00 | 1,57,139.14 |
| ஒக்டோபர் | | 49,000.00 | | | 49,000.00 |
| நவம்பர் | | | | | 0.00 |
| டிசம்பர் | | | 25,000.00 | | 25,000.00 |
| மொத்தத் தொகை | 6,69,999.99 | 4,64,239.15 | 39,500.00 | 79,087.00 | 12,52,826.14 |

6.5.6 Details of the Services done to Industries by the other Departments of NERDC,


### 6.4.6 நிலையத்தின் ஏனைய திணைக்களங்களினால் வழங்கப்படுகின்ற சேவைகள்

மின்சார, மின்னியல் மற்றும் இலத்திரனியல் திணைக்களம், சிவில் பொறியியல் திணைக்களம், சுற்றாடல் மற்றும் மின்சக்தித் திணைக்களம், விவசாய மற்றும் இயந்திராதிகள் அபிவிருத்தி மற்றும் மெகாட்ரொனிக் பொறியியல் திணைக்களங்களினூடாக மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள்

| சேவை | எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| விளக்குப் பரிசோதனைகள் | 111 | 6,36,800.00 |
| ஈயம் அசிட் அமில மின்கலப் பரிசோதனை | 29 | 50,200.00 |
| பரிசோதனை மற்றும் மேற்பார்வைச் சேவைகள் | 04 | 32,600.00 |
| செம்மையாக்கற் சேவைகள் | 19 | 1,76,400.00 |
| ஆய்வுகூடப் பரிசோதனைகள் - சிவில் பொறியியல் | 209 | 7,49,280.00 |
| உயிர் வாயு ஆய்வுகூடம் | 08 | 8,000.00 |
| முன்வலுவூட்டப்பட்ட கட்டட ஆக்கக்கூறுகளை உற்பத்தி செய்தல் | | 3,00,000.00 |
| அறிவின் அடிப்படையிலான பயிற்சி நிகழ்ச்சிகள் | 30 | 3,60,000.00 |

### 6.5 நிலையத்தின் பிரதான நிர்வாக அலுவலகத்தை மேம்படுத்துதல்

2017 ஆம் ஆண்டில் நிலையத்தின் பிரதான நிர்வாக அலுவலகம் மறுசீரமைக்கப்பட்டது.







*நிலையத்தின் முன்பக்க அலுவலகக் கட்டடம்*

### 6.6 மெகாட்ரோனிக் திணைக்களக் கட்டடத்தை மேம்படுத்துதல்



மெகாட்ரொனிக் பிரிவின் கட்டடத்தின் முன்பகுதியோடு இரு மாடியுடன் கூடிய போடிகோவுடனான ஒரு பகுதி சேர்க்கப்பட்டது.

நிலையத்தின் கட்டட நிர்மாணத் தொழிநுட்பத்தின் அடிப்படையில் படிவரிசை, கூரை, மற்றும் கைப்பிடி வேலி உட்பட புதிய நுழைவுக் கட்டடம் அமைத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 6.7 சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுப் பத்திரங்கள்

2017 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வுப் பத்திரங்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்டன.

| | தலைப்பு | ஆசிரியர் | ஏற்பாட்டாளர் |
|---|---|---|---|
| 1 | ஒருமுறை குப்பை அகற்றுவோம்! தேசிய பொறுப்பை நிறைவேற்றுவோம்! | பொறியியலாளர் ஜே ஏ ஏ டி ஜயசூரிய | இலங்கை மன்றக் கல்லூரி |
| 2 | நில நீர்த்தொகுதியைப் பாதுகாப்பதற்கு கடந்த காலத்தின் மூலமான பாடங்கள் | பொறியியலாளர் டபிள்யு. கே. ஆர். பீரிஸ் | தேசிய விஞ்ஞான மன்றம் |
| 3 | நீர் முகாமைத்துவம் மற்றும் சூழல் கட்டமைப்புக்குமிடையிலான தொடர்பினடிப்படையில் ஓடைகளினூடாக வாய்க்கால் வழியினூடாக மற்றும் ஆய்வின் மூலம் ஃபிலப்பேட் அமைப்பதற்கான பகுப்பாய்வு மாதிரி | பொறியியலாளர் டபிள்யு. கே. ஆர். பீரிஸ் | தேசிய விஞ்ஞான மன்றம் |
| 4 | ஃபெரோ-சீமேந்து தாங்கி | பொறியியலாளர் ஜீ.ஜீ.கே.கே.ஏ டி சில்வா | இந்திய ஃபெரோ சீமெந்து சங்கம், கேரளா |
| 5 | ஃபெரோ சீமெந்து அடிப் பாலம் | திரு. டபிள்யு.பீ.ஆர்.டி. வீரசிங்ஹ | இந்திய ஃபெரோ சீமெந்து சங்கம், கேரளா |
| 6 | முன்வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் தடுப்புச் சுவர் நிர்மாணித்தல் | பொறியிலாளர் டபிள்யு டபிள்யு. பீ. கே. பெரேரா | கட்டமைப்புப் பொறியியலாளர் சங்கம், இலங்கை |
| 7 | செலவுப் பயனுறுதி வாய்ந்த முறையில் ஒட்டப்பட்ட இணைந்த தென்னங் கம்புகளை அறிமுகப்படுத்துதல் | பொறியியலாளர் பீ. என். எஸ். அமரதாஸ | கட்டமைப்புப் பொறியியலாளர் சங்கம், இலங்கை |

### 6.8 தொழில்நுட்ப ஒப்படைப்பு, அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல், பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பிரபல்யப்படுத்தும் செயற்பாடுகள்

மேலே குறிப்பிட்ட செயற்பாடுகள் தொழில்நுட்ப சந்தைப்படுத்தல் திணைக்களத்தினால் ஏனைய திணைக்களங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றின் விபரங்கள் பின்வருமாறு.

6.8.1 2017 தொழில்முயற்சியாளர்களுக்கான தொழில்நுட்ப ஒப்படைப்பு

| தொழில்நுட்பம் | அனுமதிப்பத்திரம் பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. செலவுப் பயனுறுதியான கட்டடத் தொழில்நுட்பம் | 03 |
| 2. சீமெந்தினால் வலுவூட்டப்பட்ட மண் கல் உறப்த்திக் கைத்தொழில் | 03 |
| 3. முன் வலுவூட்டப்பட்ட அடிப்பாலம் நிர்மாணம் | 01 |
| 4. ஃபெரோ சீமெந்து தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அடிப் பாலங்கள் நிர்மாணித்தல் | 01 |
| 5. காய்கறி உலர்த்தி | 02 |
| 6. யோகட் இன்கியூபேற்றர் | 01 |
| 7. காலினால் இயக்கப்படும் நீர்க் குழாய் வாய் | 01 |
| 8. மரவள்ளி அரியும் இயந்திரம் | 01 |
| 9. Bottom Ash கலவை சீமெந்து அச்சுக் கல் உற்பத்தி | 10 |

### 6.8.2 அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல

நேர்ட அனுமதிப்பத்திரம் பெற்ற தொழில்முயற்சியாளர்கள் தங்களது அனுமதிப்பத்திரங்களை வருடாந்தம் புதுப்பிப்பது அவசியமாகும். 2017 ஆம் ஆண்டில் ஒவ்வொரு தொழில்நுட்பத்தின் கீழும் புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பதிரங்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

1. செலவுப் பயனுறுதிவாய்ந்த கட்டட நிர்மாணத் தொழில்நுட்பம் 22
2. முன்வலுவூட்டப்பட்ட கொங்கிரீட் கட்டடப் பொருள் உற்பத்திக்கான கொங்கிரீட் முற்றமொன்றைக் கொண்டு நடாத்துதல் 02
3. தகனக்கிரியை மண்டபங்கள் நிர்மாணித்தல் 05
4. வீட்டில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல் 01
5. நடுத்தர அளவிலான புதிய தேங்காய் எண்ணெய் வார்ப்பு இயந்திரம் 01
6. மரமுந்திரிகை உலர்த்தி 01
7. உயிர்வாயு உற்பத்தி நிர்மாணம் 02
8. கைத்தொழில் அடுப்பு நிர்மாணம் 01
9. தேங்காய் உரிக்கும் இயந்திர உற்பத்தி 01
10. காய்கறி உலர்த்திகளின் உற்பத்தி 01
11. சீமெந்தினால் வலுவூட்டப்பட்ட அமுக்க மண் கல் உற்பத்தி 05
12. சீமெந்தினால் வலுவூட்டப்பட்ட அமுக்க மண் கல் இயந்திர (கையினால் இயக்கப்படும்) உற்பத்தி 01
13. சீமெந்தினால் வலுவூட்டப்பட்ட அமுக்க மண் கல் இயந்திர (ஹைட்ரொலிக் முறையில் இயக்கப்படும்) உற்பத்தி 01
14. இயற்கை வளி வழங்கப்படும் விறகு அடுப்பு 01
15. நேர்ட் நிர்மாணத் தொழில்நுட்பத்தை செலவுப் பயனுறுதி வாய்ந்ததாகத் திட்டமிடுதல் 01

### 6.8.3 நேர்ட் தொழில்நுட்பங்கள் தொடர்பில் அறிவூட்டும் நிகழ்ச்சிகள்

நிலையத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழிநுட்பம் மற்றும் உற்பத்திகளை பல்வேறு நிறுவனங்களினுடாக பிரபல்யப்படுத்துவதற்கான அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அந்த வகையில் 2017 ஆம் ஆண்டில் கீழ்க்காட்டப்பட்டுள்ள அறிவூட்டும் நிகழ்ச்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| திகதி | நிகழ்ச்சி |
|---|---|
| 24.03.2017 | நாரம்மல விதாதா நிலையத்தில் நேர்ட் தொழிநுட்பங்கள் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சி |
| 04.05.2017 | சுகாதார அமைச்சு ஏற்பாடு செய்த "மகிழ்ச்சியான கிராமம்" ( சதுட்டு கம்மான) நிகழ்ச்சி |
| 28.06.2017 | பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட பசுக்களுக்கான உணவுகளை உற்பத்தி செய்யும் இயந்திரம் பற்றி - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம் |
| 21.07. 2017 | கண்டி., கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் தொழில் முயற்சியாளர்களுக்காக நடத்தப்பட்ட நேர்ட் தொழிநட்பம் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சி |
| 01.07. 2017 | கனேமுல்ல-பொல்லத்த வடக்கு சணச சங்கத்தின் உறுப்பினர்களுக்காக நேர்ட் தொழிநுட்பம் மற்றும் குறைந்த செலவு பயனுறுதிக் கட்டட தொழிநட்பம் பற்றி அறிவூட்டல் |
| 24.07 2017 | மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் 55 மாணவர்களுக்கு செலவுப் பயனுறுதி வாய்ந்த கட்டடத் தொழில்நுட்பம் தொடர்பில் வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சி |

| திகதி | நிகழ்ச்சி |
|---|---|
| 11.08. 2017 | நேர்ட் நிறுவனத்தின் தகனக் கிரியை மண்டப அனுமதிப்பத்திரமுள்ளவர்களுக்கான செயலமர்வு ஒன்று நடத்துதல் |
| 15.08.2017 | மத்திய மாகாண வீடமைப்புத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட செலவு குறைந்த பயனுறுதிவாய்ந்த கட்டட தொழில்நுடபம் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சி |
| 16.08. 2017 | சிரேஷ்ட கைத்தொழில் அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோருக்காக நேர்ட் தொழிநுட்ப முறைமைகள் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சி வெங்கலசத்திக்குளம் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்டது |
| 17.08. 2017 | நேர்ட் தொழிநுட்பம் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சி மன்னார் - நகர பிரதேச செயலகத்தில் சிரேஷ்ட கைத்தொழில் அதிகாரிகளுக்காகவும் யாழ்ப்பாண மாவட்ட அதிகாரிகளுக்காகவும் நடத்தப்பட்டது |
| 31.08 2017 | மத்திய பதில் மாகாண வீடமைப்புத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட செலவு குறைந்த பயனுறுதிவாய்ந்த கட்டட தொழில்நுடபம் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சி |
| 21.11. 2017 | திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேர்ட் தொழிநுட்பம் அறிமுகப்படுத்தப்பட்ட சிறிய பாலங்கள் ( அடிப் பாலம் ) பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சி |
| 27.11. 2017 | காலி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேர்ட் சிறிய பாலங்கள் (அடிப்பாலம்) பற்றிய அறிவூட்டும் நிகழ்ச்சி |
| 27.11.2017 | கேகாலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நர்ட் சிறிய பாலம் (அடிப்பாலம்) பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சி |

### 6.8.4 பயிற்சி நிகழ்ச்சிகள்

நிலையத்தின் தொழிநுட்பங்கள் பற்றி ஆர்வமுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக கீழ்க்காட்டப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சிகள் 2017 ஆம் ஆண்டில் நடைபெற்றன.

| திகதி | நிகழ்ச்சி | பங்கேற்பு |
|---|---|---|
| 2017.01.17-19 | சேனபுரவில் நடாத்தப்பட்ட தயாரிக்கப்டப்ட கொங்கிரீட் கட்டடப் பாக உற்பத்தி நிகழ்ச்சி - புனர்வாழ்வளிக்கப்படும் ஆட்களுக்கானது | 28 |
| 2017.01.20-22 | சேனபுரவில் நடாத்தப்பட்ட தயாரிக்கப்டப்ட கொங்கிரீட் கட்டடப் பாக உற்பத்தி நிகழ்ச்சி - புனர்வாழ்வளிக்கப்படும் ஆட்களுக்கானது | 34 |
| 2017.03.02 | சீமெந்தினால் அழுத்தப்பட்ட மட்கல் தயாரிக்கும் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நேர்ட் நிலையத்தில் நடாத்தப்பட்டது. | 10 |
| 2017.03.07-10 | நேர்ட் நிலையத்தின் பயனுறுதி வாய்ந்த கட்டடத் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி (4 நாட்கள்) | 15 |
| 2017.03.15 | திட்ட வரைஞர்களுக்காக நேர்ட் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட நிர்மாணத் தொழிநுட்பம் பற்றிய நிகழ்ச்சி | 14 |
| 2017.05.09 மற்றும் 2017.05.18 | SLIIT மாணவர்களுக்கான CAD / CAM பயிற்சி நிகழ்ச்சி | 35 |
| 2017.05.23 | சீமெந்துச் சலாகை உற்பத்திக் கைத்தொழில் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 13 |
| 2017.06.07 | SLIIT மாணவர்களுக்கான CAD / CAM பயிற்சி நிகழ்ச்சி | 13 |
| 2017.07.06 | சீமெந்தினால் அழுத்தப்பட்ட மட்கல் தயாரிக்கும் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நேர்ட் நிலையத்தில் நடாத்தப்பட்டது. | 12 |

| திகதி | நிகழ்ச்சி | பங்கேற்பு |
|---|---|---|
| 2017.08.29 | சீமெந்தினால் அழுத்தப்பட்ட மட்கல் தயாரிக்கும் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நேர்ட் நிலையத்தில் நடாத்தப்பட்டது. | 13 |
| 2017.09.12-15 | நேர்ட் நிலையத்தின் பயனுறுதி வாய்ந்த கட்டடத் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி (4 நாட்கள்) | 17 |
| 2017.09.26 | சீமெந்தினால் அழுத்தப்பட்ட மட்கல் தயாரிக்கும் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நேர்ட் நிலையத்தில் நடாத்தப்பட்டது. | 27 |

### 6.8.5 விசேட நிகழ்ச்சிகள்

நிலையத்தின் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முறை மற்றும் தொழிற்சாலை எரிசக்தி வினைத்திறன், சுற்றாடல் முகாமைப் பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள் தொடர்பான அடிப்படை அறிவை வழங்கும் குறிக்கோளுடன் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு நிறுவனங்களுக்காக நிலையத்தின் தொழில்நுட்பப் பூங்காவில் இந்திகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

| திகதி | நிகழ்ச்சி | பங்கேற்பு |
|---|---|---|
| 04.03.2017 | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின உத்தியோகத்தர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 13 |
| 15.03.2017 | லங்கா கொவி அமைப்பின அங்கத்தவர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 11 |
| 23.03.2017 | IESL உத்தியோகத்தர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 21 |
| 06.06.2017 | மாபிம மகா வித்தியாலய மாணவர்களுக்கான விசேட விஞ்ஞான நிகழ்ச்சி | 300 |
| 18.08.2017 | மகசக்தி கூட்டுறவுச் சங்கத்தின் சிறியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 41 |
| 12.09.2017 | வாரியபொலை சமுர்திச் சங்கத்தின் சிறியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 52 |
| 13.09.2017 | சரண சங்கத்தின் சிறியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 44 |
| 11.10.2017 | கம்பஹா சமையல் செயலமர்வு அங்கத்தவர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 122 |
| 24.10.2017 | அம்பாறை மாவட்ட மகளிர் வலையமைப்பின் (தொழில்நுட்பக் கல்லூரி) சிறியளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 46 |
| 12.12.2017 | பொல்பிதிகமை விதாதா நிலையத்தின் விதாதா உத்தியோகத்தர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 15 |
| 15.12.2017 | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 22 |
| 16.12.2017 | பொல்பிதிகமை பிரதேச செயலகத்தின் சிறிய தொழில்முயற்சியாளர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 64 |
| 26.12.2017 | அக்குரஸ்ஸ வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரியர்களுக்கான விசேட நிகழ்ச்சி | 39 |
| 28.12.2017 | வாத்துவை பாடசாலை மாணர்வகளுக்கான விசேட நிகழ்ச்சி | 48 |

### 6.8.6 வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சிகள் (Out Bound Training Programme)

இந்த வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்களின் விஞ்ஞான அறிவு, குழு உணர்வு, தலைமைத்துவம் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் நிலையத்தின் தொழில்நுட்பப் பூங்காவில் 2017 ஆம் ஆண்டில் நான்கு நிகழ்ச்சிகள் பின்வரும் முறையில் நடாத்தப்பட்டன.

| திகதி | பிரயோகப் பயிற்சி | பங்கேற்பு |
|---|---|---|
| 2017/03/04-05 | இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான வதிவிடப் பயிற்சி | 50 |
| 2017/04/04-05 | நேர்ட் நிலையத்தின் புதிய பதவியணியினருக்கான வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சி | 27 |
| 2017/09/22-23 | விதாதா உத்தியோகத்தர்களுக்கான வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சி | 43 |
| 2017/11/21-22 | கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சி | 42 |

### 6.8.7 கண்காட்சிகளில் பங்கேற்றல்

நிலையத்தின் மேம்படுத்தப்பட்ட தொழிநுட்பத்தை பிரபல்யப்படுத்தும் நோக்கில் கண்காட்சிகளில் பங்குபற்றுதல் இடம்பெறுகிறது. 2017 ஆம் ஆண்டில் கீழ்வரும் கண்காட்சிகளில் நிலையம் பங்குபற்றியது.

| திகதி | கண்காட்சி |
|---|---|
| 09.01.2017 | பசுமைக் கண்காட்சி ( மகாவலி அமைச்சு ) பண்டாரநாயக்க நாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் |
| 1 -3,02.2017 | சப்ரகமுவைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 2017 பிரிஹிம்பினி தியவர கண்காட்சி |
| 13 -15,02.2017 | கேகாலைக் கல்லூரியில் இடம்பெற்ற கண்காட்சி |
| 15 -17,02.2017 | டி. எஸ். சேனாநாயக கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சி |
| 23 -25,02.2017 | தங்கொட்டுவை கல்லூரியில் இடம்பெற்ற அபிமான கண்காட்சி |
| 17 -19,03.2017 | அம்பாறை நகர சபைத் திடலில் நடைபெற்ற “திகாமடுல்ல நவோத்ய கண்காட்சி” வியபாரக் கண்காட்சி மற்றும் அம்பாறை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் வியாபார கிளினிக் - 2017 |
| 11.03.2017 | “லிய வருண 2017 “ சுதந்திர ஆகேட் இலிருந்து நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சி |
| 30.03.2017- 01.04 2017 | “கொழும்பு 05 விசாகா வித்தியாலாய கண்காட்சி - (பொருட்கள் மற்றும் கண்காட்சி) |
| 31.03.2017- 04.04.2017 | பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற “ தொழில் முயற்சியாளர் 2017 “ கல்வி, தொழில் முயற்சியாண்மை வியாபாரக் கண்காட்சி |
| 25 -27,08.2017 | பனை அபிவிருத்திச் சபை ஏற்பாட்டில் காலி முகத்திடலில் இடம்பெற்ற கண்காட்சி |
| 01 -05,10.2017 | களனிப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கண்காட்சி |
| 13 -15,10.2017 | பண்டாரநாயக ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற டெக்னோ 2017 கண்காட்சி |
| 11.11.2017 | நேர்ட் தொழில்நுட்பப் பூங்காவில் நடைபெற்ற திறந்த நாள் கண்காட்சி |

6.8.8 பங்குபற்றிய தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள்

| திகதி | நிகழ்ச்சி |
|---|---|
| 11.03 2017 | "லிய வருண - 2017" தகவல் தொழில்நுட்ப அலகு |
| 24.05.2017 | சிரச தொலைக்காட்கியால் தயாரிக்கப் படுகின்ற கதல்ல நிகழ்ச்சியில் குறு வீடியோ காட்சி ஒளிபரப்பப்பட்டமை |
| 21.06.2017 | வீட்டு உயிர் வாயுத் தொகுதி மற்றும் நீர் சுத்திகரிப்பு தொடர்பான விதுலொவ நிகழ்ச்சிக்கான ஒளிப்பதிவு |
| 16.07. 2017 | செலவுப் பயனுறுதி வாய்ந்த கட்டடத் தொழிநுட்பம் பற்றிய கதல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சி |
| 23.07. 2017 | செலவுப் பயனுறுதி வாய்ந்த கட்டடத் தொழிநுட்பம் பற்றிய கதல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சி |
| 06.08. 2017 | செலவுப் பயனுறுதி வாய்ந்த கட்டடத் தொழிநுட்பம் பற்றிய கதல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சி |
| 13.08. 2017 | செலவுப் பயனுறுதி வாய்ந்த கட்டடத் தொழிநுட்பம் பற்றிய கதல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சி |
| 20.08.2017 | செலவுப் பயனுறுதி வாய்ந்த கட்டடத் தொழிநுட்பம் பற்றிய கதல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சி |
| 01.09.2017 | சுயாதீன தொலைக்காட்சி நிறுனவத்தின் "மல்பார" தகவல் தொழில்நுட்ப அலகின் நிகழ்ச்சி |
| 26.07.2017 | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற நேரடி நிகழ்ச்சி "சந்தமினி ஆர" (மகளிர் இதழ்) இன் கீழ் நர்ட் தொழிநுட்பம் மற்றும் உற்பத்தி , சுயதொழில், வீட்டுக் கழிவு முகாமைத்துவம் பற்றிய நிகழ்ச்சி |
| 17 & 24.08. 2017 | விதுலொவ விஞ்ஞான நிகழ்ச்சிகள் 02 |
| 29.08. 2017 | நேரடி நிகழ்ச்சி "சந்தமினி ஆர" (மகளிர் சஞ்சிகை) தகவல் தொழில்நுட்ப அலகு |

6.8.9 வெளியிடப்பட்ட ஆக்கங்கள்

| | பத்திரிகை ஆக்கங்கள் |
|---|---|
| 1 | வித்யா சஞ்சிகை ஆக்கங்கள் - 26.04.2017 |
| 2 | பண்டாரநாயக ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் இணையதளம் - முயற்சியாண்மைக் கண்காட்சிக்கான ஆக்கம் |
| 3 | வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்தல் தொடர்பான இணையதளத்திற்கான ஆக்கம் |
| 4 | திறன் சஞ்சிகைகான ஆக்கம் - 2017 ஜூலை |
| 5 | திறன் சஞ்சிகைக்கான ஆக்கம் - 2017 செப்டம்பர் |
| 6 | திறன் சஞ்சிகைகான ஆக்கம் - 2017 நவம்பர் |
| | **இணைய ஆக்கங்கள்** |
| 7 | இணைய தளத்திற்கான 02 ஆக்கங்கள் - இன்கியூபேற்றர் திறத்தல் மற்றும் திறந்த நாள் கண்காட்சி 2017 |
| 8 | திறந்த நாள் தெரண தொலைக்காட்சி நாடகம் (நவம்பர் 01 முதல் 10 வரை) |
| 9 | சமூக ஊடகங்களுக்கான ஈடுபாடு - ஃபேஸ்புக் பக்கம் |
| 10 | தற்போதைய செலவுப் பயனுறுதி வாய்ந்த கட்டட நிர்மாண அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கான அடிப்பாலம் நிர்மாணித்தல் தொடர்பான செயலமர்வு |
| 11 | திருகோணமலை மற்றும் கேகாலை மாவட்ட செயலகங்களில் இடம்பெற்ற நேர்ட் அடிப் பால தொழிநுட்பம் மற்றும் ஏனைய தொழிநுட்பங்கள் பற்றிய அறிவூட்டும் நிகழ்ச்சிகள் |
| 12 | நேர்ட் தொழிநுட்ப பூங்காவை 2017 நவம்பர் 10 ஆம் திகதி பொதுமக்களுக்கு இலவசமாகப் பார்வையிடலாம் என தினமின,டேய்லி நியுஸ், தினகரன் ஆகிய பத்திரிகைகளில் 3 விளம்பரங்கள் |
| 13 | சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் ஹிரு டீவி நிறுவனம் ஆகியவற்றின் பிரதான செய்தியறிக்கைகளில் இன்கியுபேட்டர் திறப்பதாக அறிவிக்கப்பட்டமை |

### 6.8.10 2017 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட காப்புரிமை அனுமதிப்பத்திரங்கள்

பின்வரும் தொழில்நுட்பங்களுக்கு காப்புரிமை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

| காப்புரிமை இலக்கம் | காப்புரிமை அனுமதிப்பத்திரம் | ஆவணங்கள் ஒப்படைத்தல் |
|---|---|---|
| 19589 | புகையூட்டப்பட்ட மீன் தயாரிப்பு | 09/11/2017 |
| 19590 | கால் விரல்களினால் இயக்கப்படும் ரோபோ கை | 09/11/2017 |
| 19598 | இயந்திர மயப்படுத்தப்பட்ட ஸ்லிப் - உருவ அமைப்பில் சுவர் நிர்மாணிக்கும் உபகரணம் | 16/11/2017 |

### 6.8.11 தொழில்நுட்பப் பூங்கா மற்றும் பொறியியல் அருங்காட்சியகத்தைப் பார்வையிடுதல்

நிலையத்தின் தொழில்நுட்பப் பூங்காவும் அருங்காட்சியகமும் ஒவ்வொரு கிழமையும் செவ்வாய்க் கிழமை முதலும் சனிக் கிழமை வரையான நாட்களில் திறந்திருக்கின்றன.

2017 ஆம் ஆண்டில் தொழில்நுட்பப் பூங்காவைப் பார்வையிட்டோரின் எண்ணிக்கை பின்வருமாறு காணப்பட்டது.

| | | |
|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | - | 8,687 |
| ஆசிரியர்கள் | - | 894 |
| பொது மக்கள் | - | 1,623 |
| | | ----------------- |
| கிடைத்த மொத்த வருமானம் | - | ரூபா. 6,85,900.00 |
| | | ========== |

# 07. நலனோம்பல் மற்றும் சமய விவகாரங்கள்

நிறுவனப் பதவியணியின் தனிநபர் தொடர்புகள், ஒத்துழைப்பு, குழு உணர்வு, நிறுவனத்தின் பொதுச் செயற்பாடுகளில் காட்டும் அர்ப்பணிப்பு போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்கில் ஊழியர் நலன்புரி மற்றும் சமயச் செயற்பாடுகள் தொடர்பிலும் இந்நிறுவனம் விசேட கவனம் செலுத்துகின்றது. அதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டில் நிலையத்தின் நலன்புரிச் சங்கத்தினாலும் சமயங் சங்கங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

## 7.1 நலன்புரிச் சங்கம்

2017 ஆம் ஆண்டில் நிலையத்தின் நலன்புரிச் சங்கத்தினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- நேர்ட் நிலையத்தின் ஊழியர் குழாம் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் பங்கேற்புடன் சித்திரைப் புத்தாண்டு ஏற்பாடு -2017.04.26
- நிறுவனத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவரான வித்யாஜோதி ஏ.என்.எஸ். குலசிங்க அவர்களின் பிறந்த தினத்தை ஒட்டியதாக வருடாந்தம் நடத்தப்படுகின்ற இரத்த தான நிகழ்வு ஏற்பாடுசெய்தல் - 2017.10.27
- நேர்ட் ஊழியர் குழாத்தினதும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினதும் பங்கேற்புடன் ஒன்றுகூடலொன்று நடாத்தப்பட்டது - 2017.12.29

## 7.2 சமயச் சங்கங்கள்

பௌத்த சங்கம் மற்றும் கத்தோலிக்கச் சங்கம் ஆகிய இரண்டு சங்கங்களும் நிலையத்தினுள் சமயச் செயற்பாடுகள் தொடர்பில் முன்னின்று செயற்படுகின்றன. நிறுவனத்தின் ஊழியர்களின் ஆன்மதிக மற்றும் உளவில அபிவிருத்திக்காகப் பல்வேறு நிகழச்சிகள் இச்சங்கங்களின் தலைமையில் மேற்கொள்ளப்படுகின்றன. நிலையத்தின் அனைத்து ஊழியர்களும் இச்சங்கங்களில் ஒன்றில் தன்னார்வமாக அங்கத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அச்சங்கங்கள் 2017 ஆம் ஆண்டில் பின்வரும் சமய மற்றும் சமுக செயற்பாடுகளில் ஈடுபட்டன.

### 7.2.1 பௌத்த சங்கம்

- 2017.01.02 ஆந் திகதி நிலையத்தின் புது வருடச் செயற்பாடுகள் ஆரம்பித்த முன்னிட்டு பிரித் பாராயணம் செய்யும் நிகழ்ச்சியொன்றை நடாத்தியது
- பொகுணுவிட்ட ஸ்ரீ வினயாலங்காராமவாசீ குகுல்பணே சுதஸ்ஸி தேரரால் 2017.03.21 அன்று சுமதுர தர்மபோதனை ஒன்று நிகழ்த்தப்பட்டமை.
- வெசாக் போயா தினத்தை முன்னிட்டு சங்கைக்குரிய கிம்புலாபிட்டிய விமலானந்த தேரரரினால் 2017.05.08 ஆந் திகதி சுமது தர்மபோதனை நடாத்தப்பட்டது.
- கொத்தமலை அம்பத்தலாவை பிரக்ஞாபிரதீப பிரிவேனையில் 2017 கட்டின தான நிகழ்ச்சியை நடாத்தியமை மற்றும் அதிபல் பங்கேற்றமை 2017.05.08 மற்றும் 09 ஆந் திகதிகள்
- 2017.10.25 ஆந் திகதி ஜா-எலை, வலிகம்பிட்டி ஜயவர்தன சிறுவர் இல்லத்தின் பிள்ளைகளுக்கான பகலுணவும் அன்பளிப்புக்களும் வழங்குதல்.

### 7.2.2 கத்தோலிக்க சங்களம்

- நிறுவனத்தில் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற நத்தார் தேவ ஆராதனை 2017.12.18 ஆந் திகதி நிலைய வளவினுள் நடாத்தப்பட்டது

# 08. அடிப்படைக் கணக்கீட்டுக் கொள்கைகள்

**8.1.1 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட அடிப்படைகள்**

இதில் அடங்கியுள்ள நிதி நிலைமை தொடர்பான கூற்று, நிதிப் பெறுபேறுகள் தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் தொடர்பான கூற்று என்பன இலங்கையின் அரசாங்கத் துறை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்க த் தயாரிகக்ப்பட்டுள்ளன.

நடப்பு கணக்கீட்டு வருடம் 2017.01.01. முதல் 2017.12.31 வரையான காலப் பகுதியாகும்.

**8.1.2 மதிப்பீடு மற்றும் கணக்கீட்டுக்கான அடிப்படை**

நிலையத்தின் நிதிக் கூற்றுக்களின் நிலைமை தொடார்பான கூற்று, நிதிப் பெறுபேறுகள் தொடர்பான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன தொடர்ச்சியான இருப்பு மற்றும் வரலாற்று ரீதியான செலவுக் கோட்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டள்ளன.

**8.2.3 கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட நாணய அலகுகள்**

இந்த நிதிக் கூற்றுக்கள் மூலம் எடுத்துக் காட்டப்படும் கொடுக்கல் வாங்கல்கள், இந்த நிலையம் இயங்கும் அடிப்படைப் பொருளாதாரச் சூழல்களில் பயன்படுத்தப்படும் நாணய அலகான இலங்கை ரூபாவிலாகும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் குறிப்பிடப்படும்.

**8.2.4 ஒப்பீட்டுத் தகவல்கள்**

2016.12.31 ஆந் திகதி முடிவடைந்த காலப் பகுதிக்கான ஒப்பீட்டுத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதன் போது நிதி நிலைமையைக் கூற்று, தொழிற்பாட்டுக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டு குறிப்புக்கள் என்பவற்றை நடப்புக் காலப் பகுதியுடன் ஒப்பிடக் கூடியதாக உள்ளது.

**8.2.5 முக்கியமான கணக்கீடுகளை உறுதிப்படுத்துதல், மதிப்பீடு செய்தல் மற்றும் எடுகோள்கள்**

இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய கொள்கைகள், சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமான, எதிர்பாராத பொறுப்புக்களை அடையாளம் காண்பது தொடர்பான முகாமைத்துவத்தை மதிப்பீடு செய்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் எடுகோள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் தொடர்பிலான நிச்சயமற்ற தன்மைகளின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் போதியளவு செம்மையாள செம்மையாக்கங்கள் எதிர்காலத்தில் செய்யப்படலாம். இதன் போது நிலையத்தின் எதிர்கால தொடர்ச்சியான இருப்பு மற்றும் வளங்களின் போதியளவுதன்மை தொடர்பில் முகாமைத்துவத்தினால் உரிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், நிலையத்தின் இருப்பு தொடர்பில் தாக்கம் செலுத்துகின்ற நிச்சமயற்ற நிலைமைகள் அல்லது சந்தேகங்கள் முகாமைத்துவத்திற்கு இல்லை. அதனால் தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையிலேயே நிதிக் கூற்றுக்களின் அடிப்படையிலாகும்.

### 8.3 சொத்துக்கள்

#### 8.3.1 இனங்காணல் மற்றும் அளவீடு செய்தல்

(ஆ) மீளாய்வாண்டின் போது நிலையம் அறிமுகப்படுத்திய 21 தொழில்நுட்பங்களிலில் இருந்து 55 அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 09 தொழில்நுட்பங்களில் இருந்து 23 அனுமதிப்பத்திரங்களை மாத்திரமே வழங்கக் கூடியதாக இருந்தது. அந்த தொழில்நுட்பங்களில் 08 தொழில்நுட்பம் 2008 - 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது நிலையத்தால் அறிகப்படுத்தப்பட்டிருந்த தொழில்நுட்பமாக இருந்ததுடன் 2013 - 2017 காலப்பகுதியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மேம்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 - 2017 காலத்திற்குரியதாக நிலையத்தால் தொழில்நுட்பம் மற்றும் 20 தொழில்நுட்ப உபகரணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 14,992,213 கிரயமொன்று செலவிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தொழில்நுட்ப கையளித்தல் (Technology Transfers) ரூபா 312,102 கிரயமான 02 தொழில்நுட்பங்களை மாத்திரமே கையளிக்கக்கூடியதாக இருந்தது. அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மற்றைய 18 தொழில்நுட்பங்களில் எதுவும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சமூகமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் 100 அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், புதுப்பிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 46 ஆகும். அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்பம் தொடர்பாக தொழில்முயற்சியாளர்களிடமிருந்து ஆர்வமொன்று காணப்படாமையினால் இலக்கிடப்பட்ட மட்டத்தில் புதிய அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிலையத்தின் தொழில்நுட்பம் தொடர்பாக பொதுமக்களுக்கிடையே

நம்பிக்கையினை உறுதிப்படுத்துவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் வழக்கிழப்பு ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கும் விளம்பர நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் நிலையம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(உ) 2013 - 2017 காலப்பகுதியின் போது நிலையத்தினால் 20 தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பேடன்ட் அனுமதிப்பத்திரத்திற்காக நான்கு தொழில் நுட்பங்களுக்காக மாத்திரமே கோரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஊ) தென் மாகாண சபை, கடற்றொழில் மற்றும் கால்நடை உற்பத்தி அமைச்சுக்காக குளங்களில் நீர்த் தாவரங்களை வெட்டி அகற்றும் இயந்திரமொன்று ஈடுபடுத்தும் செயற்திட்டமொன்று 2016 யூன் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது 2016 செப்தெம்பர் 09 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அமைச்சினால் அவ்வவ்போது இந்த இயந்திரத்தின் ஆகக் கூடிய தேவையினைக் காண்பித்து ஆராய்ச்சி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு கோரப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 வரை 03 சந்தர்ப்பங்களின் போது திகதி நீடிக்கப்பட்டிருந்த போதும் இயந்திரத்தை ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. செயற்திட்டத்திற்காக ரூபா 368,364 கிரயம் செலவிடப்பட்டிருந்தது.

(எ) சுயமாக யோகட் - நிரப்புதல் மற்றும் முத்திரையிடல் இயந்திரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்று 2017 பெப்ரவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 560,000 ஆகக் காணப்பட்டது. உரிய காலஎல்லையில் பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக செயற்திட்டக் காலம் 2018 பெப்ரவரி 28 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 யூலை கணக்காய்வுத் திகதி வரையிலும் ரூபா 576,247 கிரயமொன்றைச் செய்திருந்த போதிலும், இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தேங்காய் துருவலை பயன்படுத்தி உயர் தரத்துடன் உள்ள தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்ளும் இயந்திரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டமொன்று மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன்

கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரத்தின் பிரகாரம் மாதிரி இயந்திரமொன்றை அமைத்து அதனைப் பரீட்சித்து அபிவிருத்தி செய்து இறுதியில் அவ்வாறான 04 இயந்திரங்களை உற்பத்தி செய்தல் நிலையத்தின் பணிப்பொறுப்பாக இருந்தது. மாதிரி இயந்திரம் மற்றும் இன்னுமொரு இயந்திரத்தை அமைப்பதற்காக ரூபா 2,240,104 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இந்த இயந்திரம் தொடர்பாக வெப்பக் கட்டுப்பாட்டு முறைமையில் பிரச்சினைகள் காணப்படுகின்றமையால் மூலப்பொருட்கள் உரியவாறு உள்ளீடு செய்யப்பட்டது முதல் வெளியே வராதவைகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதற்காக சரியான தீர்வொன்று பயன்படுத்தப்படவில்லை. செயற்திட்டத்திற்குரியதாக 04 இயந்திரங்கள் அமைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஒரு இயந்திரம் மாத்திரம் அமைக்கப்பட்டமையின் காரணமாக எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 313,572 கிரயமான 02 செயற்திட்டங்களின் ஆராய்ச்சி சந்தர்ப்பங்களின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகளின் காரணமாக வெற்றியடையாதிருந்ததுடன் அந்தக் குறைபாடுகளை மாற்றியமைப்பதற்காக பொருத்தமான தொழில்நுட்ப முறைமையைப் பயன்படுத்தி செயற்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் அனேக சந்தர்ப்பங்களில் எதிர்பார்த்த காலத்தில் பூர்த்தி செய்யப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 2014 - 2016 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 20 செயற்திட்டங்கள் 02 மாதம் முதல் 24 மாதம் வரையிலான காலத்தில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உரிய கால எல்லையில் பூர்த்தி செய்வதற்கு தவறியமையின் காரணமாக 06 மாதம் முதல் 31 மாதம் வரையிலான காலத்தால் திகதி நீடிக்கப்பட்டிருந்தது. திட்டமிடலில் குறைபாடுகள் காணப்பட்டமை, வெளித்தரப்பினர்களுடன் முறையான பிரகாரம் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாமை மற்றும் செயற்திட்டத்தை செய்துகொண்டிருக்கும் போது

7

இருதரப்பினரிடையே ஏற்படுகின்ற பிணக்குகளின் காரணமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்தல் தாமதமாகியிருந்தது.

(இ) கை இயந்திர கைத்தொழிலுக்கு தேவையான துணிகளைப் பரிசோதனை செய்யும் இயந்திரமொன்றை உற்பத்தி செய்யும் செயற்திட்டம் 2015 திசெம்பர் 08 ஆந் திகதி ஆரும்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் முதலாவது கட்டமாக ரூபா 840,950 பெறுமதியான இயந்திரமொன்று உற்பத்தி செய்யப்பட்டு 2016 திசெம்பர் 23 ஆந் திகதி கைத்தொழில் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இயந்திரத்தில் அவ்வவ்போது ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக 2018 யூலை கணக்காய்வுத் திகதி வரையிலும் 06 சந்தர்ப்பங்களில் கைத்தொழில் திணைக்களத்தால் நிலையத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், இயந்திரம் செயற்படுத்த முடியுமான நிலைக்கு உட்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் II ஆம் கட்டத்தின் போது இந்த இயந்திரத்தினை மேம்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதனை நிறைவேற்ற முடியாதிருந்தது.

(ஈ) குருணாகல் மாநகர சபைக்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 5,690,000 தொகையான உயர் தொழில்நுட்பத்துடன் உள்ள புதிய சுடலைக் கூடமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டமொன்று 2016 பெப்ரவரி 05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 மார்ச் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டக்காலம் 2018 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அத்திகதியில் ரூபா 4,766,748 தொகை இதற்காக செலவிடப்பட்டிருந்தீ போதிலும், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) காலி வக்கல் மோதர மற்றும் பெந்தர நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் வாய்க்கால் மேல் வரும் நீரை கரைக்கு வருவதை கட்டுப்படுத்துவதற்கான நிலையம் விவசாய அபிவிருத்தி திணைக்களத்துடனும் கமநல அபிவிருத்தி திணைக்களத்துடனும் ஒன்றிணைந்து 2014 ஆம் ஆண்டின் போது இரண்டு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 2018 யூலை கணக்காய்வுத் திகதி வரையிலும் இரண்டு செயற்திட்டங்களுக்காக ரூபா 218,108 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இரு தரப்பினர்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்பட்டமை, முறையான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாமை போன்ற காரணங்களினால் செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன.

8

**4.3 இனங்காணப்பட்ட நட்டம்**

2015 - 2017 ஆம் காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட 10 வணிக செயற்திட்டங்களில் வருமானத்திற்கு அதிக செலவினமொன்று செய்ய வேண்டி ஏற்பட்ட காரணத்தினால் ரூபா 2,771,188 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**5 நிலைபேறான அபிவிருத்தி**

**5.1. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

(அ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக தேசிய பொறியியல் ஆய்வு அபிவிருத்தி நிலையத்தால் தமது விடயப்பரப்பின் கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக தெளிவுபடுத்தியிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட பிரகாரம் அறிந்திருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய கட்டங்களுக்கும், இலக்குகளை அடையப்பட்டமையை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இலக்குகள் அடையப்பட்டமையை அளவீடு செய்வதற்கான சரியான தரவு அடிப்படையை உருவாக்கிக் கொள்வதற்குத் தேவையான நிதிஏற்பாடு, பயிற்சி பெற்ற ஊழியர்கள் அல்லது பௌதீக வசதிகள் தேவை என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) இன் பிரகாரம் பெறுகை நடைமுறையில் ஒவ்வொரு கட்டிடத்திற்கான காலத்தைக் காண்பிக்கும் வகையில் வரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

9

(ஆ) நிலையத்தால் குறைந்த செலவில் நிர்மாணத் தொழில்நுட்பமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் போது அலுவலகத்தின் முன்பக்க தொகுதியை நவீனமயப்படுத்தும் (Rehabilitation of Front Office Building) ஒப்பந்தம் ரூபா 7,868,607 ஒப்பந்தப் பெறுமதியில் வெளி ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் தலைவருக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் முகாமைத்துவம் | வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்தும் போது தாமதம் காணப்பட்டமை. |
| (ஆ) பெறுகை முகாமைத்துவம் | (i) பொருட்கள் நிலையத்திற்கு கிடைத்த பின்னர் செயலாற்றல் பிணைமுறி பெற்றுக்கொள்ளல். |
| | (ii) கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதற்கு முன்னர் பொருட்களை சரியான பிரகாரம் அமுல்படுத்தப்படுகின்றமைக்கான சிபாரிசு பெறப்படாமை. |
| | (iii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை திகதியின்றி வழங்கப்பட்டிருந்தமை. |
| | (iv) பெறுகைத்திட்டத்தில் உள்ளடக்கப்படாத பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |

10

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | | | |
|---|---|---|---|
| | | (v) | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்திற்கும் உள்ளபடியான கிரயத்திற்கும் இடையே பாரிய முரண்கள் காணப்பட்டமை. |
| | | (vi) | பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் பொருட்களை வழங்குவதற்காக நீண்ட காலம் எடுக்கப்பட்ட சந்தர்ப்பம் காணப்பட்டமை |
| | | (vii) | கேள்வி திறக்கும் போது கேள்வி திறத்தில் குழு அறிக்கைகளில் சகல அங்கத்தவர்களும் கையொப்பமிடாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| (இ) | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு | (i) | வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறைசேரி அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |
| | | (ii) | நேர்முகப் பரீட்சை பதிவேடுகளில் சகல உத்தியோகத்தர்களும் கையொப்பமிடாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |
| (ஈ) | செயற்திட்ட முகாமைத்துவம் | (i) | செயற்திட்ட காலத்தை நீடிக்கின்ற சந்தர்ப்பங்களின் போது அதற்கான காரணங்கள் காண்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை |
| | | (ii) | செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன் முறையான உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

11

# 15. கணக்காளர் நாயகத்தின் நிதி அறிக்கை மீதான பணிப்பாளர் சபையின்

இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2017 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) உறுப்புரையின் அடிப்படையிலான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

பின்வரும் விடயங்கள் தொடர்பில் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறோம்.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 கருத்துக்கள்**

**2.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துக்கள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

எமது விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க குடிநீரைச் செய்வதற்கான உபகரணத்தை விடுவித்துக் கொள்வதற்காகச் செலுத்திய கொடுப்பனவுகள் மற்றும் கிடைப்பனவுகள் நிலையத்தின் தொழில்நுட்பங்களைப் பிரபல்யப்படுத்தும் செலவுகளிலிருந்து செய்யப்பட்டுள்ளன. இந்தத் தொகையைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் அமைச்சுக்கு நேரடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை கிடைத்த பின்னர் அதனை பிரபல்யப்படுத்தல் செலவுத் தலைப்பிற்கான வருமானமாகக் கருதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நி தொடர்பில் செயற்திட்டங்கள்

| | | |
|---|---|---|
| (i) | திம்புலாகலை தகனக்கிரியை மண்டப நிர்மாணம் | ரூபா. 128,176.92 |
| (ii) | அலஹர தகனக்கிரியை மண்டப நிர்மாணம் | ரூபா. 128,176.92 |
| (iii) | தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் தகன மண்டப நிர்மாணம் | ரூபா. 141,167.01 |
| (iv) | விலேகொட ஓடைக்கான வான் கதவு ஒன்றைப் பொருத்துதல் | ரூபா. 84,601.00 |
| | | ரூபா. 482,121.85 |

மேற்குறித்த செயற்திட்டங்கள் அனைத்தும் உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்டு உரிய நிறுவனங்களிடம் முறைப்படி கையளிக்கப்பட்டுள்ளன. அவற்றின நிறுத்தி வைக்கப்பட்ட மீதமுள்ள தொகையைப் பெறுவதற்கு வாய்மொழி மூலமும் எழுத்து மூலமும் தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் தொடர்ந்து அது தொடர்பில் முயற்சி செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

(ஆ) இங்கு குறிப்பிட்டுள்ள 04 செயற்திட்டங்களுக்குமான விளக்கங்கள் கீழே தரப்படுகின்றன.

<u>குருநாகல் போதனா வைத்தியசாலைக்கான உயிர் வாயுத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்</u>

குருநாகல் போதனா வைத்தியசாலையில் உயிர் வாயுத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கான இச்செயற்திட்டம் அப்போது அந்த வைத்தியசாலையில் பணிப்பாளராக இருந்த ஒருவரின் வேண்டுகோளின் பேரில் இந்நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. அதன் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் போது எமது நிறுவனத்தினால் திட்டமிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 3 இடங்களை வைத்தியசாலையில் நிர்வாகிகள் அடிக்கடி வேறு இடங்களுக்கு மாற்றினர். பின்னர் அந்த இடத்தில் நிர்மாணப் பணிகள அனைத்தும் பூர்த்தி செய்து செயற்படும் நிலையிலுள்ள உயிர் வாயு உற்பத்தித் தொகுதி குருநாகல் போதனா வைத்தியசாலையிடம் 2016.05.30 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டது. இந்த உயிர் உற்பத்தித் தொகுதியை செயற்படக் கூடிய நிலையில் பேணி வருவதற்காக அதற்குத் தேவையான உக்கும் பொருட்கள் (சமையல் அறையிலிருந்து அகற்றப்படும் காய்கறிகள், கழிவுப் பொருட்கள் மற்றும் எச்சில்) செரிமானிகளுள் போடுவதற்கு வைத்தியசாலையின் வாட்டுக்களின் அருகாமையினால் கொண்டு செல்ல வேண்டி ஏற்பட்டது. (இந்நிகழ்வின் காரணம் முதலில் திட்டமிடப்பட்ட இடங்கள் மாற்றப்பட்டமையாகும்) எனினும் அந்த கழிவுப்பொருள் அகற்றல் ஓரளவு துர்வாடையுடன் வாட்டுக்களினுள் வருவதாக நோயாளிகள், வைத்தியர்கள் உள்ளிட்ட ஊழியர்களிடமிருந்து முறைப்பாடொன்று கிடைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் இச்செயற்திட்டத்தை ஆரம்பித்த வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு இடமாற்றம் கிடைத்து புதிய பணிப்பாளர் ஒருவர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

புதிய பணிப்பாளருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் செரிமானித் தொகுதியை செயற்பாட்டு நிலையில் வைத்திருப்பதை இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமையில், எமது நிறுவனத்தினால் செய்யப்பட்ட அவதானிப்புக்களின் போது உக்கும் பொருட்களை உள்ளீடு செய்யும் இடங்கள் (inlets) அனைத்தும் சீமெந்து மூலம் முத்திரையிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதனால், அந்த தொகுதி செயற்பாட்டு நிலையில் இல்லை. செயற்பாட்டு நிலையில் எம்மால் வழங்கப்பட்ட செரிமானித் தொகுதி செயற்பாடற்ற நிலையில் இருப்பதன் காரணமாக நாம் பலமுறை முன்வைத்த வாய்மொழி மற்றும் எழுத்துமூலக் கோரிக்கைகளைப் புறக்கணித்து இந்த மீதித் தொகையை செலுத்துவதை அவர்கள் தவிர்த்து வருகிறார்கள். இது தொடர்பில் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**<u>மேல் மாகாண கைத்தொழில் சேவைகள் அதிகாரசபைக்கு புடவைகளைப் பரிசோதிப்பதறகான இயந்திரமொன்றை உற்பத்தி செய்து வழங்குதல்</u>**

இந்த புடவை பரிசோதனை இயந்திரத்தை நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கி வழங்குவதற்காக எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனால், அதில் ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் உள்ளடங்கியிருந்தன. அந்தச் செயற்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டு மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் அந்த இயந்திரத்தை உரிய தேவைக்காகப் பயன்படுத்தும் போது அடிக்கடி ஏற்பட்ட கோளாறுகள் எம்மால் திருத்தப்பட்டன. அந்த இயத்திரத்தில் மேலும் கோளாறுகள் ஏற்படாத விதத்தில் ஒரு முறையான இயந்திரமாக மேம்படுத்தி ஒப்படைப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் கைத்தொழில் திணைக்கள மேற்பார்வை உத்தியோகத்தர்களும் இயந்திர இயக்குநர்களும் வருகை தந்து மேற்பார்வைச் செயற்பாடுகளை மேற்கொண்டனர். அவர்கள் அது தொடர்பில் திருப்திகரமான துலங்கல்களை வெளிப்படுத்தியுள்ளனர். அதற்கிணங்க, நிறுத்திவைக்கப்பட்ட 47,971 ரூபாவை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>நீர்கொழும்பு நகர சபையின் தகனக்கிரியை மண்டப திருத்த வேலைகள்</u>**

இச்செயற்திட்டத்திற்கான நிறுத்தி வைக்கப்பட்ட தொகை தவிர மீதமுள்ள அனைத்துத் தொகைகளும் செலுத்தப்பட்டுள்ளன. நிறுத்திவைக்கப்பட்ட தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>புல்மோட்டை கனிம மணல் கூட்டுத்தாபனத்தின் கனிம மணல் பிரித்தல் இயந்திரத் தொகுதியின் திருத்த வேலைகள்</u>**

இந்த திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும் போது கனிம மணல் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலை உத்தியோகத்தர்களின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் அவர்களின் அவதானிப்புக்களின் அடிப்படையில் செய்யப்பட்ட வேலைகளில் 85% வேலைகள் தொடர்பில் திருப்திகரமான பின்னூட்டங்கள் கிடைத்தன. மீதமுள்ள வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் செய்யப்பட்ட வேலைகளுக்கு மாத்திரமே கொடுப்பனவுகளைச் செலுத்த முடியும் என்றும் இயந்திரத்தை திருப்பிக்கு கொண்டு செல்லுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அதனடிப்படையில், எமது நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய 35% கொடுப்பனவான ரூபா 275,543/- ஐச் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

3. **<u>நிதி மீளாய்வு</u>**

**3.1 நிதிப் பெறுபேறுகள்**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிதிப் பெறுபேறுகளை ஏற்றுக் கொள்கிறேன்.

**4. <u>தொழிற்பாட்டு மீளாய்வு</u>**

**4.1 செயலாற்றுகை**

4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

(அ) செலவுச் சிக்கமான கட்டடத் தொழில்நுட்பம் தொடர்பில் அறிவூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதன் குறிக்கோள், அத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்து தொடர்பில் அத்தொழில்துறையிலுள்ள தொழில்வாண்மையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு அறிவூட்டுவதும் அதன் மூலம் இத்தொழில்நுட்பத்தை நாட்டில் பிரபல்யப்படுத்துவதுமாகும். இது, இத்தொழில்நுட்பத்தை ஒப்படைப்பதற்கும் உதவியாக அமையும். இந்த அறிவூட்டல் நிகழ்ச்சிகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்படவில்லை என்று கூற முடியாது.

(ஆ) தொழில்நுட்ப ஒப்படைத்தலை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 21 தொழில்நுட்பங்களில் 7 தொழில்நுட்பங்களுக்கான களப் பரிசோதனைகளை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாமல் போனமையாலும், 2 தொழில்நுட்பங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய முடியாமல் போனமையாலும், அந்த 9 தொழில்நுட்பங்களின் ஒப்படைப்பை மேற்கொள்ள முடியவில்லை. ஏனைய தொழில்நுட்பங்களுக்கான தொழில்நுட்ப ஒப்படைப்புக்களை மேற்கொள்வதற்கு ஓரளவு முயற்சிகள் செய்யப்பட்ட போதிலும், தொழில்நுட்பங்களைப் பெறுபவர்கள் முன்வரவில்லை.

(இ) 2013-2012 காலப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட 20 தொழில்நுட்பங்களில் 2018 டிசம்பர் வரையில் 2 தொழில்நுட்பங்கள் தொழில்முயற்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 4 தொழில்நுட்பங்களுக்கான சில உபகரணங்கள் உற்பத்திசெய்யப்பட்டு விற்பனை மூலம் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 5 தொழில்நுட்பங்கள் தொடர்பில் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் இத்தொழில்நுட்பங்களை ஒப்படைப்பதற்குவும் சமூகமயப்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும்.

(ஈ) மீளாய்வாண்டில் 100 அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கு இலக்காகக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பது படிப்படியாகக் குறைந்துள்ளது.

தொழில்நுட்ப அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தலுக்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர்களிடமிருந்து கிடைத்த பதில்கள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. காப்புரிமை பெற்ற தொழில்நுட்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட்ட போதிலும் சில தொழில்நுட்பங்களுக்கான செல்லுபடியாகும் காலம் ஏற்கனவே காலாவதியாகியுள்ள போதிலும் அந்தத் தொழில்நுட்பங்களுக்கான அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதில் ஆர்வம் காட்டப்படவில்லை.

மேலும், சில தொழில்நுட்பங்கள், பெறுபவர்களிடம் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆர்வத்தின் காரணமாக பெறப்பட்ட போதிலும் பின்னர் அத்தொழில்நுட்பத்தை முன்னே கொண்டு செல்லும் ஆர்வம் அவர்களிடம் காணப்படுவதில்லை.

இது தொடர்பில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. காலங் கடந்த தொழில்நுட்பங்களிலிருந்து விடுபட்டு புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி பொது மக்களின் நம்பிக்கை உறுதிப்படுத்துவது, விளம்பரச் செயற்பாடுகளை முன்பை விரிவுபடுத்துவது தொடர்பில் எமது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையின் கீழ் அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்கும் செயற்பாட்டை அதிகரிக்க முடியும் என்று அறியத் தருகின்றேன்.

(உ) ஒவ்வொரு தொழில்நுட்பம் தொடர்பிலும் காப்புரிமை பெற முடியாமை. அதனால், நான்கு தொழில்நுட்பங்களுக்கு காப்புரிமை பெறுவதற்கான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல தொழில்நுட்பங்களுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பாரக்கப்படுகின்றது.

(ஈ) தென் மாகாண மீன்பிடி அமைச்சினால் அடையாளம் காணப்பட்ட ஒரு பிரச்சினையான, "குளங்களில் நீர்ச் செடிகளை அகற்றுதலுக்கான" இயந்திரமொன்றை உருவாக்கும் தேவை தொடர்பில் எம்முடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. இங்கு நாங்கள் ஏற்கனவே ஆய்வு மட்டத்தில் காணப்படும் கால்வாய்களில் நீரியல் தாவரங்களை அகற்றும் இயந்திரமொன்றை உருவாக்கி முடித்த பின்னர் பயன்படுத்தவுள்ள வாய்ப்புக்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டதுடன், அதனை எளிய இயந்திரமொன்றை அவர்கள் முன்மொழிந்தார்கள். இந்த இயந்திரம் சிறப்பாகத் இயங்கும் என்று எமது பொறியியலாளர்கள் கருதியமையினால், அதன் அடிப்படையில், ஆய்வு செய்து இயந்திரத்தை உருவாக்கி தென் மாகாண மீன்பிடி அமைச்சுடன் இணைந்து களப் பரிசோதனை மேற்கொள்வதற்கு இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதனை மூன்று மாதங்களில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டது. இந்த இயந்திரம் குறுகிய காலத்தில் உருவாக்கப்பட்டு களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் போது அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் சரிசெய்யப்பட்டு பல களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த இயந்திரம் எதிர்பார்த்த விதத்தில் சிறப்பாக இயங்காமையினால் இதற்கு நீண்ட காலம் எடுத்தது. இறுதியில் இந்த இயந்திரம் இதற்குப் பொருத்தமற்றது என்ற தீர்மானத்திற்கு எங்களால் வர முடிந்தது. ஆய்வுச் செயற்திட்டங்களில் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் கிடைக்காமல் போதல் ஒரு சாதாரண விடயமாகும்.

மேலே குறிப்பிட்ட காரணங்களினால் இச்செயற்திட்டம் ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ளது. நாங்கள் ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள கால்வாய்களில் நீர்த் தாவரம் அகற்றும் இயந்திரம் உருவாக்கப்பட்டு களப் பரிசோதனைகளின் பின்னர் வெற்றியடைந்ததன் பின்னர், அந்த இயந்திரங்களை குளங்களில் நீர்த் தாவரங்களை அகற்றுவதற்கான இயந்திரத்திற்கும் பயன்படுத்த முடியும். அதனால் இச்செயற்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் அந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி குளங்களில் நீர்த் தாவரங்களை அகற்றுவதற்கான இயந்திரமொன்றைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(எ) இந்த இயந்திரமானது ஆய்வுச் செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக உருவாக்கப்படுகின்றது. இச்செயன்முறையின் போது எதிர்பாராத விதமாக தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டதுடன் தற்போது அவை சீர்செய்ய்பபட்டு வருகின்றன. இயந்திரத்தின் அனைத்துப் பிரதான பகுதிகளும் பூர்த்தியடைந்துள்ளன. இயந்திரத்தின் தொழிற்பாட்டை உறுதிப்படுத்தியதன் பின்னர் அதனை ஒப்படைத்து நிலுவைப் பணத்தைப் பெறுவதற்கு எதிர்பாரக்கப்படுகின்றது.

(ஏ) இச்செயற்திட்டம் COSTI நிறுவனத்தினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் இதில் பின்வரும் பங்காளர்கள் உள்ளனர்:

1. பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்
2. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
3. விதாதா வள நிலையங்கள்

இந்த இயந்திரத்திற்கான வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் கொரிய தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டதுடன், அவர்களுடைய திட்டத்திற்கு இணங்க அந்த விபரக் குறிப்புக்களில் எந்தவொரு மாற்றமும் செய்யாமல் அந்த இயந்திரத்தை உற்பத்தி செய்து அதனைப் பரீட்சித்து செய்ய வேண்டிய மேம்பாடுகளை அடையாளம் காண்பதாகும். இதற்காக, எமக்கு கொரிய தரப்பினர் 1,745,425 ரூபாவை வழங்கினர். அதனடிப்படையில், கொரிய மாதிரிக்கு அனைத்து வகையிலும் சமனான விதத்தில் மாதிரி இயந்திரமொன்று எம்மால் உருவாக்கப்பட்டது. அதனைப் பரிசோதித்த போது அது உரிய விதத்தில் இயங்குவதில்லை என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க, அதில் செய்யப்பட வேண்டிய மேம்பாடுகள் அடையாளம் காணப்பட்டன. இதற்குச் செலவான நேரடிச் செலவு ரூபா 493,823.74. ஆகும். இயந்திரத்திற்கான மேம்படுத்தல்கள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) செலவுச் சிக்கனமான கூரைக்கான பலகைச் சட்டகமொன்றை நிர்மாணித்தல், தயாரித்த கொங்கிரீட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாடிப் படிகள் நிர்மாணித்தல் என்பனவே இந்த இரண்டு செயற்திட்டங்களுமாகும். இந்தச் செயற்திட்டங்கள் இரண்டும் பின்வரும் விதத்தில் சிறப்பாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

**<u>செலவுச் சிக்கனமான கூரைக்கான பலகைச் சட்டகமொன்றை நிர்மாணித்தல்</u>**
இச்செயற்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட ஆய்வுப் பெறுபேறுகளின் படி 10 அடிகளுக்குக் குறைந்த இடைவெளியைக் கொண்ட ஓட்டுக் கூரைகளை நிர்மாணிப்பதற்கு இது பொருத்தமானது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இப்பெறுபேறுகள் கட்டமைப்புப் பொறியியல் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது.

**<u>தயாரிக்கப்பட்ட கொங்கிரீட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மாடிப் படிகள் நிர்மாணித்தல்</u>**
வீடுகளை நிர்மாணிப்பதற்கு தயாரிக்கப்பட்ட கொங்கிரீட்டுக்களைப் பயன்படுத்தி செலவு குறைந்த மாடிப் படித் தொகுதியை நிர்மாணிப்பதற்குத்த தேவையான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்காக இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஆய்வுச் செயற்திட்டத்தின் ஊடாக மாடிப் படித் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டதுடன் நடைமுறையில் பயன்படுத்திப் பரீட்சித்த போது நுண் வெடிப்புக்கள் காணப்பட்டன (நுணுக்கமான கோடுகள்) அந்த வெடிப்புக்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கு அதிக பணம் தேவையானதுடன், அத்தொகை ஏற்கனவே நாங்கள் எதிர்பார்த்த தொகையை விட அதிகமாகக் காணப்பட்டமையினால், செயற்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பது பொருத்தமற்றது என்று தீர்மானிக்கப்பட்டது.

**(ஆ) ஆய்வுச் செயற்திட்டங்களுக்கான காலப் பகுதிகளை நீடிப்பதில் தாக்கம் செலுத்துகின்ற காரணிகள் தொடர்பான விளக்கம் கீழே தரப்படுகின்றது.**

i. புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பொறியியலாளர்கள் ஆய்வுச் சூழலுக்குப் பழக்கப்படுவதற்கு அவர்கள் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களேனும் ஆய்வுச் செயறிட்டங்களில் இணைந்து செயற்பட வேண்டி இருந்த போதிலும், இந்நிறுவனத்தில் இணையும் பொறியியலாளர்களில் பெரும்பாலானோர் குறுகிய காலத்தில் நிறுவனத்தை விட்டு விலகிக்ச் செல்கின்றனர். இதனால் ஆய்வுச் செயற்பாடுகள் தாமதமடைவதுடன் மேலே குறிப்பிட்ட அனைத்து ஆய்வுச் செயற்திட்டங்களினதும் காலங்கள் நீடிக்கப்படுவதற்கான பிரதான காரணமாக இவ்விடயத்தைக் குறிப்பிட முடியும்.

ii. சில செயற்திட்டங்களுக்கு மிகச் சரியான காலப் பகுதியைத் தீர்மானிப்பது சிரமமானதாகும். ஆய்வுச் செயற்திட்டங்களுக்கான காலப் பகுதிகள், ஆய்வுக்கு முன்னர் அது தொடர்பில் ஆய்வுப் பொறியியலாளர்கள் மேற்கொள்ளும் ஆய்வின் ஊடாகவே தீர்மானிக்கப்படுகின்றன. அந்த விடயத்தை தயாரித்த வேலைத் திட்டத்திற்கு இணங்க ஆய்வுகளை மேற்கொள்கின்ற போது, பல்வேறு தொழில்நுட்பப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டி ஏற்படுவதுடன் அத்தீர்வுகளை ஆய்வுச் செயற்திட்டங்களின் போது பெற்றுக்கொள்வதற்குத் தேவையான காலப்பகுதியை உறுதியாகக் கூறுவது சிரமமாகவுள்ளதுடன் வெற்றிகரமான தீர்வைக் கண்டுபிடிக்கும் வரையில் அதற்காகக் காலத்தைச் செலவிட வேண்டி ஏற்படும். இந்த நிலைமையின் காரணமாக செயற்திட்டங்களின் காலப்பகுதிகளை நீடிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

iii. ஆய்வுச் செயற்திட்டங்களில் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் தொழில்நுட்பங்களை அல்லது உற்பத்திகளை களத்தில் மேற்கொள்ளும் பயன்பாட்டின் மூலம் மீண்டும் மேம்படுத்த வேண்டிய விடயங்களை அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்துவது அவசியமாகும். இத்தகைய கள ஆய்வுகளையும் திட்டமிட்ட காலப் பகுதிகளில் மேற்கொள்ள முடியாமல் போகும்.

Iv. வெளிநிறுவனங்களிடமிருந்து வளப் பங்களிப்புக்களைப் பெறுகின்ற போதும் திட்டமிடும் காலப் பகுதியினுள் அவை பெரும்பாலும் மேற்கொள்ளப்படுவதில்லை. குறிப்பாக ஆய்வு திட்டங்களுக்காக மனித வளங்களை பெறுகின்றபோது, ஆய்வுத் திட்டமும் செயற்பாட்டுத் திட்டமும் வளவாளர்களின் பங்களிப்பைப் பெறுவதிலுள்ள சாத்தியத்தின் அடிப்படையில் ஆய்வுச் செயற்திட்டங்களின் காலப் பகுதிகள் தீர்மானிக்கப்படும்.

(இ) இந்த இயந்திரம் 2016 டிசம்பர் 23 ஆம் திகதி கைத்தொழில் திணைக்களதிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் அவர்கள் தொடர்ச்சியாக அந்த இயந்திரத்தைப் பயன்படுத்தினார்கள். எவ்வாறாயினும், அடிக்கடி ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு தொடர்பில் அவர்கள் அறிவித்த போதெல்லாம் நாங்கள் அவற்றைச் சரிசெய்து கொடுத்தோம். அந்த இயந்திரத்தில் காணப்பட்ட கோளாறுகள் ஏற்கனவே முழுமையாகச் சீர்செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில் அவர்களால் நிறுத்திவைக்கப்பட்டுள்ள (Retention) தொகையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) நிறுவனத்தினால் ஆய்வு செய்யப்பட்டு தகனக்கிரியை மண்டபம் ஒன்று 1990ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தொழில்நுட்பம் ஏற்கனவே 06 தொழில்நுட்பம் பெறுபவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு இலங்கை முழுவதிலும் 150 இற்கும் மேற்பட்ட தகனக்கிரியை மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இந்த தகனக்கிரியை மண்டபங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் காண்பபட்டதை விட தற்போது சுற்றாடல் தரநியமங்கள் மேம்பட்டுள்ளதுடன், இக்காலத்திற்கான சுற்றாடல் தரநியங்கள் மற்றும் ஏனைய தொழில்நுட்பங்களுக்குப் பொருத்தமான முறையில் இந்த தகனக்கிரியை மண்டபங்களை மேம்படுத்த வேண்டிய தேவையை எமது பொறியியலாளர் அடையாளம் கண்டுள்ளனர். அதனடிப்படையில், அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து தகனக்கிரியை மண்டபத் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக குருநாகல் நகர சபையுடன் இணைந்து இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது நேரடிச் செலவுகளுக்கான ஆரம்ப மதிப்பீடு ரூபா 11,380,000/- ஆகக் காணப்பட்டதுடன், நேர்ட் நிறுவனமும் குருநாகல் நகர சபையும் இத்தொகையை தலா 50% அடிப்படையில் (ரூபா 5,690,000) பொறுப்பேற்பதற்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் உடன்பட்டுள்ளன.

இச்செயற்திட்டத்தை 2016 பெப்ரவரி 5 ஆந் திகதி ஆரம்பித்து 2018 மார்ச் 30 ஆந் திகதி ஆகும் போது பூரத்தி செய்வதற்குத் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் செயற்திட்டப் பொறியியலாளர் முன்வைத்த பின்வரும் காரணங்களினால் இச்செயற்திட்டம் 2018 செப்டம்பர் 30 ஆந் திகதி வரையில் நீடிக்கப்பட்டது.

செயற்திட்டத்தை நீடிப்பதற்கான காரணங்கள்:

i. இதற்கான பங்காளர்களைத் தேடுவதற்கு காலம் எடுத்தமை
ii. தெரிவுசெய்யப்பட்ட பங்காளரான குருநாகல் நகர சபையிடமிருந்து பணத்தை ஒதுக்கீடு செய்துகொள்வதற்கு அதிக காலம் எடுத்தமை மற்றும் ஒப்பந்தம் செய்வதற்கு காலம் எடுத்தமை
iii. தேவையான வாயு எரிப்பு இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு அதிக காலம் எடுத்தமை
iv. அனல் பரிமாற்றம் அலகை (Heat exchanger) உற்பத்தி செய்வதற்கான விலைமனுக்கோரலில் ஏற்பட்ட தாமதம்
v. நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்தில் தேவைப்பட்ட மாற்றங்களின் காரணமாக ஏற்பட்ட தாமதம்

(உ) காலி வக்கல்மோதரை கால்வாயில் பிணையல் கதவு நிர்மாணிப்பதற்கு கமநல சேவைகள் திணைக்களத்தினால் ரூபா 112,000 எமக்கு வழங்கப்பட்டதுடன் இது 2014 டிசம்பர் மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், பின்னர் இந்தக் கதவை வக்கல்மோதரை கால்வாயில் அல்லாது பெந்தரை கால்வாயில் நிர்மாணிக்குமாறு கமநல சேவைகள் திணைக்களம் அறிவித்தது. அதனால், விவரக் குறிப்புக்கள் மாற்றமடைந்தமையால் மதிப்பீடு ரூபா 533,929 ஆக மாற்றமடைந்தது.

இதில் கதவை நிர்மாணிப்பதற்கான கொங்கிரீட் கட்டமைப்பை கமநல சேவைகள் திணைக்களம் நிர்மாணிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. கமநல சேவைகள் திணைக்களம் ஏற்கனவே உடன்பட்டதற்கு இணங்க இந்த கொங்கிரீட் கட்டமைப்பை நிர்மாணிக்காமையினால் இச்செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. இது தொடர்பில் கமநலசேவை திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 4.3 அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்

இங்கு காட்டப்பட்டுள்ள செயற்திட்ட செலவினங்கள் அதிகரித்தமை தொடர்பான விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**RED/COM/106/2013 - <u>அம்பலாங்கொடை பிணையல் கதவு</u>**

இந்தப் பிணையல் கதவை நீரின் கீழ் சுமார் 6 அளவு ஆழத்தில் பொருத்த வேண்டியிருந்ததால், அதற்கான விசேட தொழில்நுட்ப முறையொன்று எங்களால் பயன்படுத்தப்பட்டது. எதிர்பாராத விதத்தில் மோமசமான வானிலை தொடர்ந்ததுடன், நீர் மட்டமும் எதிர்பார்த்ததை விட அதிக மட்டத்தில் காணப்படும் போது கதவைப் பொருத்தும் போது ஆற்றின் அடியில் இருகிக் கொண்டது.

கதவு தொடர்ந்து மூடப்பட்டிருந்ததால் மேல் ஆற்றின் (up stream) நீர் மட்டம் அதிகரித்துக் கொண்டிருந்தது. அதனால், மோசமான வானிலை நிலவும் போதே விசேட உபகரமொன்றையும் மேலதிக ஊழியத்தையும் பயன்படுத்தி நிலைமையைச் சரிசெய்யும் போது இந்த நட்டம் ஏற்ட்டது.

**RED/COM-Act /53/2017 - <u>குளிர்சாதன ஆய்வுகூடம்</u>**

இச்செயற்திட்டத்தில் நட்டங்கள் எதுவும் ஏற்படவில்லை.

**RED/COM/02/90/2017 <u>இரத்தினபுரி தகன மண்டபம்</u>**

செயற்திட்ட மதிப்பீட்டின் போது காணப்பட்ட பெறுமதிச வரி வீதம் பின்னர் குறைவடைந்ததன் காரணமாக இந்த 1686 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

**RED/COM/2/127/2014 - <u>ரன்டம்பே உயிர்வாயு உற்பத்தி இயந்திரம்</u>**

ரூபா 33,817/- கிடைக்க வேண்டியிருந்த போதிலும் அந்தப் பணத்தை கோரி பலமுறை அனுப்பப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் எதுவும் இல்லாமையினால் இந்த நட்டம் ஏற்பட்டுள்ளது.

**RED/COM/133/2014 - <u>அதுருவல்லை பிணையல் கதவு</u>**

கமநல சேவைகள் திணைக்களத்தினால் குறித்த இடத்தில் ஆற்றின் குறுக்கு வெட்டுமுகம் (அகலம், ஆழம் வேறுபடும் முறை போன்றவை) தொடர்பில் தரப்பட்ட விபரங்கள் சரியானவையாக இருக்கவில்லை. மோமசமான வானிலை நிலைமகளின் கீழ் நீரோட்டத்தை தடுத்து நிறுத்துவதற்குத் தற்காலிக அணையொன்றை நிர்மாணிக்கும் செயற்பாடு எதிர்பார்த்த விதத்தில் பலமுறை நீரோட்டத்தினால் வெடித்து உடைந்ததன் காரணமாக கதவைப் பொருத்துவதற்கு நீண்ட காலம் எடுத்தது. நீண்ட காலம் எடுத்தமையினாலும் அதிகளவில் மனித ஊழியம் செலவாகியமையினாலும் பலதடவைகள் சென்று வர வேண்டியிருந்தமையால் போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரித்து இந்த நட்டம் ஏற்பட்டது.

**RED/COM/2/142/2014 - <u>குருநாகல் உயிர்வாயு உற்பத்தி இயந்திரம்</u>**

இச்செயற்திட்டத்தின் கீழ் குருநாகல் பெரிய ஆஸ்பத்தியில் சேகரிக்கப்படும் எச்சில்கள் மற்றும் காய்கறிக் குப்பைகளை உயிர்வாயு உற்பத்தி இயந்திரத்தின் உதவியுடன் அகற்றி உயிர்வாயுவை உணவகத்திற்கு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. பின்வரும் காரணங்களினால் இச்செயற்திட்டத்தை மதிப்பிடப்பட்ட தொகையினுள் பூர்த்தி செய்ய முடியவில்லை.

1. நிர்மாணிப்பதற்கு உத்தேசிதிருந்த இடத்திற்குப் பதிலாக வேறு இடமொன்று வைத்தியசாலை அதிகாரிகளால் வழங்கப்பட்டதுடன், அந்த இடம் வாகனங்களில் பொருட்களைக் கொண்டு செல்ல முடியாத ஒரு இடமாகும். மனித ஊழியத்தைப் பயன்படுத்தி செங்கற்கள், மணல், சீமெந்து போன்றவற்றைக் கொண்டு செல்ல வேண்டி ஏற்றபட்டமையினால் அதிக பணமும் காலமும் செலவாகியது.

2. பாதகமான வானிலை தொடர்ந்து நிலவிமையினால் (செறிபாட்டுக் குழிகளின் ஓரங்கள் உடைந்தமை, நிர்மாணப் பணிகள் பாதிக்கப்பட்டமை போன்ற காரணங்களினால்) நட்டம் ஏற்பட்டது.

3. பாதகமான வானிலை நிலைமைகளின் கீழ் மணல் மற்றும் செங்கல் என்பவற்றை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியாமல் போனதால், ஊழியர்கள் வேலைகள் இன்றி இருந்தமை என்பவற்றினால் மேற்குறித்த நட்டம் ஏற்பட்டுள்ளது.

**RED/COM/136/2014 - வில்கொடை பிணையல் கதவு**

இங்கு அடையாளம் காணப்படாத ஒரு குழுவினரால் கதவுக்கான சீரமைப்புக்களைப் பொருட்படுத்தாது ஒரே தடவையில் (நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்பியுள்ள போத) திறந்தமையினால் கதவை இயக்கும் இயந்திரத்திற்குச் சேதம் ஏற்பட்டமையினால் அதனைச் சீர்செய்து கதவை இயல்புநிலைக்குக் கொண்டு வர வேண்டி ஏற்பட்டமையால் இந்தச் செலவு ஏற்பட்டது.

**N/CVL/Com/01/86/2016 - விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் நிர்மாணத்திற்கான ஆலோசனைச் சேவைகள்**

2015 ஆம் ஆண்டில் மேற்படி நிர்மாணத் திட்டத்திற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்டவாறு விஜய குமாரதுங்க வைத்தியசாலையினால் இச்செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் பணிப்பாளர் சபை, இந்தப் பணியை நிறுத்துமாறு எமது நிறுவனததிற்கு அறிவித்திருந்தது. ஒப்பந்தத்திற்கு இணங்க அது வரையில் செய்யப்பட்ட வேலைகளுக்கான கட்டணங்களை வைத்தியசாலைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் நேர்ட் நிறுவனத்திற்கு இது வரையில் அதற்காக ரூபா 28,889.00 செலவு ஏற்பட்டுள்ளது.

எனினும் நிர்மாணச் செயற்பாடுகள் வைத்தியசாலையினால் நிறுத்தப்பட்டமையினால் நாங்கள் கேட்டு அனுப்பிய தொகை எங்களுக்கு வழங்கப்படுவது நிச்சயமற்றதாக இருந்ததுடன் 2017.02.27 ஆந் திகதிய மற்றும் 2017.05.08 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் ஒப்பந்தத்திற்கு இணங்க எங்களுக்கு கிடைக்க வேண்டிய பணத்தை வழங்குமாறு கோரி மீண்டும் நினைவூட்டப்பட்டுள்ளது.

**TMD/COM-ACT/9/67/2017 - பயிற்சிநெறிகள்**

எமது தொழில்நுட்பச் செயற்திட்டங்களை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக நாங்கள் பயிற்சிநெறிகளை நடாத்திவதுடன் அப்பயிற்சிநெறிகள் மிகவும் குறைந்த அளவு பணம் அறவிடப்பட்டு நடாத்தப்படுகின்றன. அப்பயிற்சிநெறிகள் தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டுவதற்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய 03 ஊடக மொழிகளிலும் பத்திரிகை அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. அதற்காக சுமார் 145,800.00 ரூபாவை இச்செயற்திட்டத்திற்கு வைப்புச் செய்ய வேண்டி ஏற்பட்டமையினால் இச்செயற்திட்டத்தின் செலவு அதிகரித்தது.

**DFCI/COM/05/114/2015 - இறப்பர் கால்துடைப்பம் ஒன்றிற்கான அச்சு ஒன்றை உருவாக்குதல்**

நாங்கள் கொள்வனவுக் கட்டளைகளைப் பொறுப்பேற்கின்ற போது நிறுவனத்தின் இயந்திரங்களையும் மனித வளங்களையும் பயன்படுத்துவதாக உத்தேசித்து செலவுகள் மதிப்பிடப்படுகின்றன. எனினும் இந்தக் கொள்வனவுக் கட்டளையைப பூர்த்தி செய்கின்ற காலத்தில் குறித்த இயந்திரங்கள் செயலிழந்திருந்தன. அதனால், குறித்த கொள்வனவுக் கட்டளையை உரிய தினத்தில் வழங்க வேண்டியிருந்தமையினால் அச்சுக்குத் தேவையான சில பாகங்கள் வெளி நிறுவனமொன்றின் ஊடாக உருவாக்கிப் பெறப்பட்டது. அதன் போது நாங்கள் எதிர்பார்க்காத மேலதிக செலவுகள் ஏற்பட்டமையினால் நட்ட ஏற்பட்டுள்ளது என்து தீர்மானிக்க முடியும்.

## 5. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை அடைதல்

(அ) எமது செயற்திட்டங்களத் திட்டமிடும் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

(ஆ) 2019 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் 2030 நிகழ்ச்சிநிரலுக்கு இணங்க குறிக்கோள்களைத் தெளிவாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 6. கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயன்முறைகள்

(அ) சில பெறுகைகளுக்கு விரிவான பெறுகைத் திட்டங்கள் காணப்பட்டதுடன், சில பெறுகைகளுக்கு விரிவான பெறுகைத் திட்டங்கள் காணப்படாத போதிலும், பெறுகைச் செயற்பாடுகளின் முக்கிய செயற்பாடுகள் அடங்கிய சுருக்கத் திட்டங்கள் காணப்பட்டன. எவ்வாறாயினும், மேற்கொள்ளப்படும் அனைத்துப் பெறுகைகளுக்கும் விரிவான பெறுகைத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) நிறுவனத்தின் தலைமையகக் கட்டடம் (NERD Front Office) 40 வருடங்களுக்கு மேல் பழைமையான ஒரு கட்டடடமாக இருப்பதனால் அது நவீனமயப்படுத்தப்பட்டது. குறைந்த செலவிலான வீடமைப்புத் தொழில்நுட்பம் புதிய நிர்மாணத்திற்குப் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளுக்கு அது பயன்படுத்தப்படுவதில்லை. எவ்வாறாயினும், குறைந்த செலவிலான வீடமைப்புத் தொழில்நுட்பத்தில் நிர்மாணப் பணிகளைச் செய்வதற்கான தொழில்நுட்பத்தை அனுமதிப்பத்திரம் பெறுபவர்களுக்கு வழங்கி அதன் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் நேர்ட் நிறுவனத்தினால் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. அதனால், வெளி ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு இது மேற்கொள்ளப்பட்டது.

7. **தொகுதி மற்றும் நிர்வாகங்கள்**

(அ) வருடத்திற்கு ஒருமுறை தடைதாண்டல் பரீட்சை நடாத்தப்படுகிறது.

(ஆ) மேற்படி விடயத்தில் கவனம் செலுத்தி தவறவிடுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

(இ) (I) நிறுவனத்தின் பணிப்பாளர் (தொழில்நுட்பம்), பிரதான ஆய்வுப் பொறியியலாளர், சிரேஷ்ட ஆய்வுப் பொறியியலாளர் பதவிகள் எப்போதும் போல் வெற்றிடமாகக் காணப்படுவதனால் வருடம் முழுவதிலும் செல்லுபடியாகும் விதத்தில் (2016, 2017 ஆம் ஆண்டுகள் உட்பட) பத்திரிகைகள் மூலமும் எமது நிறுவனத்தின இணையதளம் மூலமும் அறிவித்தல்களை வெளியிட்ட போதிலும் உரிய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டவர்கள் விண்ணப்பிக்காமையினால் ஆட்சேர்ப்புக்களைச் செய்வது சாத்தியப்படவில்லை. மேலும், பொறியியலாளர் தொழிலுக்கு காணப்படும் உயர் கேள்வியையும் ஏனைய நிறுவனங்களில் அவர்களுக்கு அதிக சம்பளமும் கொடுப்பனவுகளும் கிடைப்பதனால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களும் மிகவும் குறுகிய காலத்தில் சேவையிலிருந்து விலகிச் செல்லும் போக்கு காணப்படுவதனால் மேற்படி பதவிகள் எப்போதும் போல் வெற்றிடமாகக் காணப்படுகின்றன. இது பல வருடங்களாக எமது நிறுவனத்தில் காணப்படும் கடுமையான ஒரு பிரச்சினையாக உள்ளது.

மேலும், கொத்தர், ஆய்வுகூட உதவியாளர் போன்ற பதவிகளுக்கு NVQ தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் காணப்படாமையினால் விளம்பரங்களை வெளியிட்டு ஆட்சேர்ப்புக்கு நடவடிக்கை எடுத்த போதிலும் வெற்றிடங்களை நிரப்ப முடியவில்லை. இது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை முன்மொழிந்து ஏற்கனவே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(II) 2017.06.06 ஆந் திகதி தொழில்நுட்ப உதவியாளர் (மின்) - MA 2-2 நேர்முகப் பரீட்சைச் சபையைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சின் உத்தியோகத்தர் பங்கேற்காமையினால் புள்ளியிடும் ஆவணத்தில் அவருடைய கையொப்பம் இடப்படவில்லை.

2016.11.04 ஆந் திகதி ஆய்வுப் பொறியியலாளர் (Mechanical) AR -1 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைச் சபையைப் பிரதிநிதித்துவம் செய்து மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியல் திணைக்களத்தின் தலைவர் தனிப்பட்ட அவசர தேவையொன்றின் காரணமாக நிறுவனத்திலிருந்து வெளியே செல்ல வேண்டி ஏற்பட்டமையினால் அந்த நேர்முகப் பரீட்சைச் சபையில் அவரால் பங்கேற முடியவில்லை. அதனால் அவர் புள்ளிப் பதிவேட்டில் கையொப்பம் இடவில்லை.

(ஈ) சில சந்தர்ப்பங்களில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவறவிடப்பட்டுள்ளதுடன், அவ்வாறு நிகழாமல் இருப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இப்படிக்கு உண்மையுள்ள
தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

பொறியியலாளர் டபிள்யு.ஜே.எல்.எஸ். பெர்னாண்டோ
தலைவர்

பொறியிலாளர் டி.டி. ஆனந்த நாமல்
பணிப்பாளர் நாயகம்